கடவுள் துணை.

செந்தமிழ்.

தொகுதி—உசு.] விபவஞூ வைகாசிமீ [பகுதி—எ.

Vol. XXVI. May-June-1928. No. 7.

அளபெடை.

அளபெடை—அளபெடுப்பது; என்றது அளபெடுத்தலையுடைய தாய எழுத்தை. அளபெடுக்குங்கால் நெட்டெழுத்தேழும் அளபெடுக்குமென்றும், அவை இவ்வளவுமாத்திரை நீண்டனவென்பதை அவ்வவற்றிற் கினமாகிய குற்றெழுத்துக்கள் காட்டி அவற்றின்பின்னே நிற்குமென்றும் நன்னூலார் கூறுவர்.

தொல்காப்பிய உரையாசிரியர்களாய இளம்பூரணர், நச்சினார்க்கினியர் என்னு மிருவரும் நெடிலுங் குறிலுஞ் சேர்ந்துநின்று அளபெடுக்குமென்னும் பொருள்பட,

"நீட்டம் வேண்டின் அவ்வள புடைய
கூட்டி யெழூஉத லென்மனார் புலவர்"

என்னுஞ் சூத்திரத்திற்கு, முறையே "நீண்டமாத்திரையையுடைய அளபெடையெழுத்துப் பெறவேண்டின், மேற்கூறிய ஓரளபும் இரண்டளபுமுடைய குறிலையும் நெடிலையும் பிளவுபடாமற் கூட்டியெழூஉக என்று கூறுவர் ஆசிரியர்" என்றும், "வழக்கிடத்துஞ் செய்யுளிடத்தும்

ஓசை [illegible] பெ[illegible]ப். பெறுதல் [illegible]ரணமாக இரண்டுமாத்திரைபெற்ற வெழுத்து அம்மாத்திரையின் மிக்கொலித்தலை விரும்புவாராயின், தாங் கருதிய மாத்திரையைத் தருதற்குரிய எழுத்துக்களைக்கூட்டி அம் மாத்திரையை எழுப்புக; என்றுகூறுவா ராசிரியர்" என்றுங் கூறுவர். இவ்விருகூற்றுள் எக்கூற்றுப் பொருத்தமுடைத்தென்பதே யாம் ஈண்டு ஆராய்வது.

அளபெடையென்பது குறில் நெடில் என்பது போல அளபெடுத்தலையுடையதாய ஓரெழுத்தையே யுணர்த்தும். ஆதலின், ஓரெழுத்தே தன்னளபினும் எழுந்தொலிக்கு மென்பது துணிபாம். ஏனெனில், இரண்டெழுத்துக்கூடி ஒலிக்குங்கால் எவ்வளவொலிக்குமென்றும், எவ்வாறொலிக்குமென்றும் தெரியவாராமையின். அன்றியும், இரண்டு கூடியொலிக்குங்கால் மூன்றுமாத்திரையின் மிக்கொலிக்குமென்பதூஉம் படும். ஆதலானும், அது பொருந்தாதென்பதே துணிபாம். இன்னும், நீட்டம்வேண்டி ஓரெழுத்தை நீட்டுங்கால் அதனையே வேண்டியஅளபு நீட்டலாமாதலின், மற்றோரெழுத்துக்கூட்டி நீட்ட வேண்டுமென்னும் யாப்புறவின்மையானும், இன்னிசையளபெடையிற் குற்றெழுத்தொன்றே நெடிலாகநீண்டு பின் னளபெடுத்தல் கண்கூடாதலானும் ஈரெழுத்துக்கூடி நீளுமென்றல் பொருந்தாமை துணிபாம். மேலும், எழுத்துக்களே சேர்ந்தொலிக்குமென்பது கருத்தாயின் நெடிலுங் குறிலுங் கூடி எழுமென விளங்கக்கூறுவார்மன்; அங்ஙனங்கூறாமையானும் ஆசிரியர்க் கது கருத்தன்மை துணியப்படும். ஆதலின் "நீட்டம்வேண்டின்" என்னுஞ்சூத்திரத்துக்கு அவ்விருவருரையும் பொருத்தமுடையவல்லவென்பதே துணிபாம். அற்றேல் அச்சூத்திரத்துக்குப் பொருள் யாதோ வெனின், கூறுதும். அவ்வுரை வருமாறு:—

நீட்டம்வேண்டின்—(ஓரெழுத்து முன்னையினும்) மாத்திரை மிக்கொலித்தலை விரும்பின், அவ்வளபுடைகூட்டி—விரும்பியமாத்திரையையுடைய எழுத்துக்களை (அளவின்பொருட்டு) அவ்வெழுத்தோடுகூட்டி, எழூஉதல்—(அவ்வளபாக) அவ்வெழுத்தினிசையை எழுப்புக, என்மனார்புலவர்—என்று சொல்லுவர் புலவர் என்பதே.

நீட்டம்—நீளல். அஃது "உரைப்பொருட் கிளவி நீட்டமும் வரையார்" என ஆசிரியர் பின்னுங் கூறுமாற்ரான் அறியப்படும். இங்கே நீட்டம்வேண்டின் என்று கூறியதனையும், எழூஉதலென்பதனையும் உற்றுநோக்குமிடத்து ஒன்றே தன்னிசை நீண்டு ஒலித்தலன்றி இரண்டுகூடி நீண்டிசைத்தலென்பது பொருந்தாமை பெறப்படும். பிறண்டும், "அளபிறந்துயிர்த்தலும்" எனவும், "ஒற்றிசைநீடலும்" எனவும், "நீட வருதல் செய்யுளு ளுரித்தே" எனவும், "உரைப்பொருட் கிளவி நீட்டமும் வரையார்" எனவும், "யகார வுகாரம் நீடிட னுரித்தே" எனவும், "ஆறன் கிளவி முதனீ ளும்மே" எனவும், "முதனிலை நீடினு மான மில்லை" எனவும் ஆசிரியர் கூறிய சூத்திரங்களை நோக்கும்போது ஓரெழுத்தே நீளுமென்பதன்றி, இரண்டெழுத்துக்கூடி நீளுமென்பது ஆசிரியர்கருத்தன்மை துணியப்படும். படவே, அவ்வளபுடையகூட்டுதல் அளவின்பொருட்டென்பது துணிபாம். துணியவே அவ்வெழுத்துக்கள் வரிவடிவில் அறிகுறியாய்வருமென்பதூஉம் பெற்ரும். அவை குறியாமாறு; வெண்பா இயற்றவிரும்பிய புலவன் ஓதல் வேண்டுமென இருசீரைஎடுத்துக்கொண்டு அச்சீரிலுள்ள தளையை நோக்கியவிடத்து, ஓதல் என்பதன் இறுதியசையும், வேண்டுமென்பதன் முதலசையும் நேரசையும் நேரசையுமாயியைந்து நேரொன்ருசிரியத்தளையாகமுடிந்தமை கண்டு, அதனை வெண்டளையாக்குமாறு ஓதல் என்னுஞ் சொல்லிலுள்ள ஓகாரத்தின்பின் ஒகரத்தைச் சேர்த்து அவ்வளபாக அவ்வோகாரத்தை யெழுப்பி இறுதியசையை நிரையசையாக்கி வெண்டளைகோடலானும், 'செறாஅ அய்வாழிய' என்றவிடத்து ஈரெழுத்துக்கூட்டி அவ்வளபாக எழுப்பித் தளைசெய்துகோடலானும் அறிந்துகொள்க. ஈரெழுத்தும் அளவாகக்கொள்ளப்படும் என்பதற்கே அவ்வளபுடைய எனப் பன்மையாகக்கூறினர்.

இன்னும், இசைகுன்றியமொழியினிடத்து நெட்டெழுத்துக்குப் பின்னே அதனேடொத்த குற்றெழுத்துநின்று அவ்விசையை நிறைக்குமென்னும் பொருளமைய,

"குன்றிசை மொழிவயி னின்றிசை நிறைக்கும்
நெட்டெழுத் திம்ப ரொத்தகுற் றெழுத்தே"

என ஆசிரியர்கூறியதனானும், குற்றெழுத்து இசைநிறைப்பதன்றி நெட்டெழுத்தோடுகூடி அளபெடாதென்பது நன்குபோதரும். அளபெடுக்குமேல் நெட்டெழுத்திம்பர் என்னாது நெட்டெழுத்துங் குற்றெழுத்துங்கூடி இசையை நிறைக்குமென விளங்கச் சூத்திரிப்பார்மன்; அங்ஙனஞ் சூத்திரியாமையானும் அவர்க் கது கருத்தன்றென்பது. அற்றேல், குற்றெழுத்து இசைநிறைக்குமென்றமையாற் குறியென்பது போதராதெனின், அது குறியாமாறு பின்னர்க்காட்டுதும்.

இனி, குற்றெழுத்துக்கள் குறியாயின் ஆகாரத்துக்கு அகரமன்றி இகரமுங் குறியாய் இடலாமே? அகர மேனிடுவா னெனின்; அறியாது கடாயினாய். என்னை? ஆகாரம் ஒருமாத்திரைநீளுங்கால் அகரவடிவாயே நீடலின், அவ்வடிவையுங் குறித்துக்காட்டுவதற்கே அகரம் வரிவடிவில் எழுதுவதாயிற்று. நச்சினார்க்கினியர் சந்தனக்கோல் குறுகினாற் பிரப்பங்கோலாகாது. அதுபோல உயிரதுகுறுக்கமும் உயிரேயாம். என்று கூறிய மறுதலையுவமையை நோக்கும்போது ஓரொலி வேறோரொலியாகக் குறுகலும் நீடலும் அடையாதென்பது பெறப்படும். அற்றேல், இரண்டுமாத்திரைநீட்சிக்கு இரண்டுமாத்திரைபெறும் எழுத்தைக் குறியாக இடாது இரண்டுகுற்றெழுத்தையிடுவது என்னையோவெனின்? ஒருமாத்திரையுடைய எழுத்து நீளுங்காற் பின்னும் ஒருமாத்திரை மிக்கு இரண்டுமாத்திரையாய் நீண்டு நெடிலாயவாறுபோல நெடிலும் நீளுங்கால் ஒவ்வோர்மாத்திரைமிக்கே நீளுமாதலின் இரண்டுகுறில் குறியாக இட்டு ஆளப்படு மென்க. இக்கருத்து, "அளபெடை மிகூஉ மிகா விறுபெயர்—ரியற்கைய வாகுஞ் செயற்கைய வென்ப" என்னுஞ் (சொல்—கஉடு-ம்) சூத்திரத்துக்குச் சேனாவரையருரைத்த உரையானும் நன்குபுலப்படும். இன்னும், நச்சினார்க்கினியரும் ஒன்றுநின்று அதனொடு பின்னரும் ஒன்று கூடியே இரண்டாவதன்றி இரண்டென்பது ஒன்று இன்றாகலின் என்றதனானும் அஃது உணரத்தக்கது. ஆகாரம் என்னும் நெட்டெழுத்து நீளுங்கால் ஒருமாத்திரை நீண்டு அகரமாய் நின்று ஒலிக்குமென்பதுபற்றியே,

"குன்றிசை மொழிவயின் நின்றிசை நிறைக்கும்
நெட்டெழுத் திம்பர் ஒத்தகுற் றெழுத்தே"

என்று ஆசிரியர் கூறுவாராயினர். இச்சூத்திரத்தில் ஆசிரியர் குற்றெழுத்து இசைநிறைக்குமென்றதனால் அக்குற்றெழுத்து எழுத்தாகக் கொள்ளப்படாதென்பதூஉம், ஒலிவடிவில் அவ்வளபெடையோசை அவ்வவ் வினவெழுத்தாய் நீண்டொலிக்குமென்பதூஉம் கூறினாராயிற்று. ஆகவே, குற்றெழுத்து ஒலிவடிவில் நெட்டெழுத்தின்பின் நின்று இசைநிறைக்குமென்பதூஉம், வரிவடிவில் நெட்டெழுத்து அவ்வவ்வினமாய் நீண்டொலிக்குமென்பதற்கும், மாத்திரைக்கும் குறியாய்நிற்குமென்பதூஉம் தானேபோதருதலின் இசைநிறைக்கும் என்றதூஉம், குறி என்றதூஉம் தம்முள் முரணாமை உணர்ந்துகொள்க.

இக்கருத்தமையவே சிவஞானமுனிவரும் தாம் திருத்திய நன்னூல் விருத்தியுரையில் "இசைகெடின்" என்னுஞ் சூத்திரத்து வரும் 'குறியே' என்பதற்கு வரிவடிவில் அறிகுறியாம் என்றும், "குற்றுயிர் அளபினீரும்" என்பதற்கு ஒலிவடிவி னீருமென்றும் உற்றுநோக்கிப் பொருந்தக்கூறியதூஉம் என்க.

அற்றேல், நெட்டெழுத்துக்கள் நீளுங்கால், நீண்ட அவற்றையும் ஓரெழுத்தாகக் கொள்ளலாமேயெனின், அவை மொழிக்குக் காரணமாய் வேறு எழுத்தோடு சேர்ந்தாயினும் தனித்தாயினும் பொருடாராமையின் அவை எழுத்தாகக்கொள்ளப்படா என்க. இக்கருத்தமையவே சிவஞானமுனிவரும், "இந்நெட்டெழுத்துக்கள் மொழிக்காரணமாய் வேறு பொருடந்துநிற்றலின், அதுபற்றி வேறெடுத்தெண்ணி உயிர் பன்னீரெழுத் தெனப்பட்டன. அளபெடை அந்நெட்டெழுத்தோடு குற்றெழுத்தொத்துநின்று நீண்டிசைப்பதொன்றாயினும், மொழிக்காரணமாய் வேறு பொருடாராது இசைநிறைத்தன்மாத்திரைப்பயத்ததாய்நிற்றலின் வேறெழுத்தெனவைத்தெண்ணப்படாதாயிற்றென்பது, நுண்ணுணர்வானோர்ந்துணர்க. 'குன்றிசை மொழிவயின் நின்றிசை நிறைக்கும்— நெட்டெழுத் திம்ப ரொத்தகுற் றெழுத்தே' என்றதூஉம் இக்கருத்துப் பற்றி யென்க." எனச் சூத்திரவிருத்தியிற் கூறுதல் காண்க.

இன்னும், நெடிலையுங் குறிலையுஞ் சேர்த்துச்சொல்லுங்கால் இரண்டுஞ்சேர்ந்து பிளவுபட் டொலிக்குமேயன்றிப் பிளவுபடா தொலிக்க மாட்டா. இதுபற்றியே சங்கரநமச்சிவாயரும் "இசைகெடின்" என்னும்

நன்னூற்சூத்திரவுரையில், "எழுத்துப் பலவாயின ஒலிவேற்றுமையா னன்றே அங்ஙனமாக நெடிலதுவிகாரமாய் ஓரொலியாகப்பிறக்கும் அள பெடையை இரண்டெழுத்துக்கூடி மூன்றுமாத்திரையாயிற் றெனக் கொள்ளின் இரண்டெழுத்தொலி யங்ஙனமின்மையானும், அளபெடை யென்னும் பெயர் ஏலாமையானும் அவ்வாறுகொள்ளாது அறிகுறியே என்று கோடற்குக் குறியே என்றார்" என்றுங் கூறினர்.

இனி, நெட்டெழுத்தே யளபெடுக்குமென்பது நச்சினார்க்கினியர்க் கும் கருத்தாதல், 'நீட்டம் வேண்டின்' என்பதற்கு, "இரண்டுமாத்திரை பெற்ற வெழுத்து அம்மாத்திரையின் மிக்கு ஒலித்தலை விரும்புவா ராயின்" என்றும், "அந்நெட்டெழுத்துக்களே யளபெடுத்தலிற்சொல்லாத லெய்தின" என்றும், மொழிமரபு கஎ-ம் சூத்திரவுரையில் "குற்றெழுத் துக்களெல்லாம் நெட்டெழுத்தை மாத்திரைமிகுத்தற்குக் கூறியவா றுணர்க" என்றும், "மாத்திரை அளக்குங்கால் நெட்டெழுத்தே மாத் திரைபெற்று மிக்குநிற்கும்" என்றும் கூறியவாற்று னறியக்கிடத்தல் காண்க. இன்னும், அவர், "வருவர்கொல் வயங்கிழாஅய் வலிப்பல்யான் கேளினி" என்புழி, "ழகரஆகாரமும் ககரஏகாரமும் மாத்திரையிறந் தொலித்தவாறு உணர்க" என்றும், கூறுமாற்றானும் அவர்க் கது கருத் தாதல் பெறப்படும். அங்ஙனேல், நெடிலுங் குறிலும் கூடியகூட்டத்துப் பிறந்து பின்னர்ப் பிளவுபடா ஓசையை அளபெடையென்று ஆசிரியர் வேண்டினாரெனக் கூறியது என்னையோவெனின், குறில் நெடிலுக்குப் பின்னேநின்று ஒலிவடிவையும், அளவையும் காட்டிக் கூடிநின்றாலன்றி அவ்வளபெடை தோன்றாமையின் அவ்வொற்றுமைபற்றி அவ்வாறு கூறினர்போலும். அவர், "இவைகூட்டிச்சொல்லியகாலத்தில்லது பெறப் படா. எள்ளாட்டியவழியல்லது எண்ணெய் புலப்படாவாறுபோல" எனக் கூறியதூஉம் இக்கருத்துநோக்கிப்போலும்.

இனி, "அவ்வளபுடையகூட்டி" யென்பதற்கு அவ்வளபுடைய ஓசைகளை அதிகப்படுத்தி எனப் பொருள்கூறலும் பொருந்தும். ஓசைகள் என்றது எழுத்தொலிகளை நான்குமாத்திரையுங்கோடற்குப் பன்மையாகக் கூறினார்.

இங்ஙனம் இச்சூத்திரத்திற்குப் பொருள்கூறாது நெடிலுங் குறிலுமாகிய இரண்டெழுத்துங்கூடியொலிக்குமெனப் பொருள்கூறின் ஆசிரியர் கருத்தொடு முரணுவதன்றி ஆசிரியரையும் பிழைபடுத்துவதாக முடியும். இரண்டெழுத்துக் கூடியொலிக்குமென்றல் தமதுகருத்துக்கு முரணுவதாற்றான் சிவஞானமுனிவரும் "எழுத்துப்பலவாயின ஒலி வேற்றுமையானன்றே. அங்ஙனமாதலின், நெடிலதுவிகாரமாய் ஓரொலியாய்ப்பிறப்பதே யளபெடையென்பார் நெடி லளபெழுமென்றும், 'அவற்றவற் றினக்குறில் குறியே' என்றுங் கூறினார்" என நன்னூலார்கருத்தை முற்கூறிப், பின், "ஆசிரியர் தொல்காப்பியனாரும் நீரு நீருஞ் சேர்ந்தாற் போல நெட்டெழுத்தோடு குற்றெழுத்து ஒத்துநின்று நீண்டிசைத்தலே யளபெடையென்பார், 'குன்றிசை......குற்றெழுத்தே' யென்றும், நெடிலுங் குறிலும் என்றும், நெடிலுங் குறிலும் விரலும்விரலும் சேரநின்றாற் போல இணைந்துநின்று அளபெடுக்குமென்றல் பொருந்தாமைக்கு எழுத்தெடையென்னாது அளபெடை யென்னுங் குறியீடே சான்றாதலறிக" என்றும் கூறினார். இக்கருத்தை நாம் உற்றுநோக்கும்பொழுது முனிவர் உரையாசிரியர்களுடைய உரைக்கியைய அவ்வாறுகூறினாரன்றித், தமதுகருத்தொடுபடக் கூறினாரல்லர் என்பது நன்கு தெளிவாம். இன்னுஞ் சூத்திரவிருத்தியின்கண் வடநூலார் 'அ' என்னும் ஓரெழுத்தே ஒருமாத்திரையாய் உச்சரிக்குங்கால், குற்றெழுத்தென்றும், இரண்டு மாத்திரையாய்க் கூட்டியுச்சரிக்குங்கால் நெட்டெழுத்தென்றும், மூன்று மாத்திரையாய் உச்சரிக்குங்கால் அளபெடையெழுத்தென்றும், மூவகைப் படுமெனக் கூறியதனாலும் இரண்டெழுத்துக்கூடி அளபெடுக்குமென்றல் தங்கருத்தொடுபட்ட உரையன்றென்பது நன்கு தெளியப்படும்.

அங்ஙனேல், "மூவள பிசைத்த லோரெழுத் தின்றே" என்றதனோடு மாறுபடுமேயெனில், மாறுபடாது. என்னை அச்சூத்திரத்திற்கு நெடிலுங் குறிலும்போல இயல்பாய வோரெழுத்து மூவளபிசைத்தலின்று என்பது பொருளாமன்றி, ஈரெழுத்துக்கூடி யொலித்தல் பொருளன்று

மாதலின். எனவே, விகாரமாய ஓரெழுத்து மூவளபிசைத்தலுண்டென்பது. விகாரம் என்றது ஈண்டு நீட்டல். இந்நீட்டல் அநுவதித்தே பின் 'நீட்டம்வேண்டி' னென ஆசிரியர் கூறினர். இதனானும் ஓரெழுத்தே நீடும் என்பது தெற்றெனப்படும்.

இனி, பாணினியார்கூறிய "ஊகாலொZஜ்ஸ்ஹ்ஸ்வதீர்க்கப்லுத:" என்னுஞ் சூத்திரவுரையில், குறிலும் நெடிலும் அளபெடையும் முறையே ஒருமாத்திரையும், இரண்டுமாத்திரையும் மூன்றுமாத்திரையும் உடையன வென்றும், இவற்றிற்கு மாத்திரை வரையறுக்குங்கால், உ, ஊ, ஊங என்னு மெழுத்துக்களின் மாத்திரையே அளவாகக்கொள்ளப்படுமென்றும், இவற்றை யளவுகருவியாகக்கொண்டது (முறையே) ஒன்று இரண்டு மூன்று என்னும் மாத்திரைகளையுடைய கு, கூ, கூஉ என்னும் கோழியினுடைய அநுகாணவோசைபோலிருத்தல்பற்றி யென்றும் கூறு மாற்றானும் ஓரெழுத்தே நீண்டொலிக்குமென்பது வடநூலார்க்குங் கருத்தாதல் காண்க.

இனிச் சேனாவரையர்க்கும் நெட்டெழுத்தொன்றே நீளுமென்பது கருத்தாதல், சொல்லதிகாரத்து கஙஉ-ம் சூத்திரவுரையில், "அளபிறந்தன வென்றது நெட்டெழுத்து அளபெடையாயும், அளபெடை மூன்று மாத்திரையினிறந்தும் செய்யுட்குத்தக்கவாறு நீண்டிசைக்குமென்றவாறு" என்பதனா லறிந்துகொள்க.

இதுகாறுங் கூறியவாற்றானே அளபெடுக்குங்கால் நெடிலுங் குறிலுங் கூடிநின்று அளபெடுக்குமென்றல் பொருந்தாதென்பதூஉம் நெட்டெழுத்தேழே அளபெடுக்கு மென்பதூஉம், குற்றெழுத்துக்கள் குறியாய்வரும் என்பதூஉம் துணிபாதல் காண்க.

சி. கணேசையர்.

கம்பராமாயண இன்கவித்திரட்டு.

[உசுசு-ம் பக்கத் தொடர்ச்சி.]

*இந்த இனிய கவியில், சீதையின் அழகில் சூர்ப்பநகை தான் ஈடுபட்டதைத் தனக்குத்தானே, மனத்துக்குள்ளே கூறிக்கொண்டாளென்பதும், மாரீசன்வதைப்படலத்தில் 'என்வயின்' என்பது முதலாகத் 'தேர்தந்த' என்பது இறுதியாக வரும் தங்நிகரில் பன்னிருகவிகளில், அவள் இராவணனுக்குச் சீதைமீது மோகமூளத் திறமைமிக்கசூழ்ச்சியுடன் சீதையின் அழகைச் சிறப்பித்துக்கூறினாளென்பதும் குறித்துக் கொள்ளற் குரியன.

சூர்ப்பநகை இராமசீதையரைநோக்கி வியப்படைதல்.

374. பொருதிறத் தானை நோக்கிப் பூவையை நோக்கி நின்றாள்;
கருதமற் றினிவே றில்லை, கமலத் துக் கடவுள் தானே
ஒருதிறத் துணர நோக்கி உருவினுக் குலகம் மூன்றின்
இருதிறத் தார்க்கும் செய்த வரம்பிவர் இருவர் என்றாள்.

இ-ள் (சீதையைப்பார்த்து இராமனை மறந்திருந்த சூர்ப்பநகை, அவன்நினைவு திரும்பிவர அவளைப்பார்த்தலைவிட்டு) அவனைப் (பார்ப்பாளாகி, அவனை முன்போலக் காமக்கருத்தோடு பாராமல், அவன் அழகை அழகின்பொருட்டே பார்க்கும் விருப்பொடு) பார்த்து, (அவ்வாறே) அவளையும் (முன்போலப் பெண்ணுக்குப் பெண் மோகங் கொண்டு பார்க்கும் பார்வையின்றி, அழகை அழகுக்கே பார்க்கும் ஆசையோடு) பார்த்து, (இதுவரையறியாத, இணையின்றி உயர்ந்த, ஆணழகு பெண்ணழகு இரண்டையும் இனிதுசுவைத்து இன்புறுவாளாய்) நின்றாள். (இருவரை அழகையும் ஆசைதீர அநுபவித்து, ஆணழகுக்கு அவனே, பெண்ணழகுக்கு இவளே, அன்றிக்) கருதுதற்கு இனி வேறு (யாரும்—சிறந்த உதாரணமாக) இல்லை; (இதன்முன், இவளுடைய அழகுமட்டும் சம்பந்தமாக, யான் கருதிய சித்திரகாதி

*'பண்புற' என்ற 373-ம் கவி,

மனிதச் சிருட்டிகள் கிடக்க, தெய்வச் சிருட்டிகளுன) பிரமனே (உத்தம லக்கணமுடைய ஓர் ஆண்மகனையும் ஒரு பெண்மகளையும் படைப்பேனாக என்று சங்கற்பஞ்செய்து தான் உலகத்தைப் படைக்கத்தொடங்கிய காலந்தொட்டு இவர்களைப் படைக்கத் துவக்கியகாலமட்டும் படைத்துப் படைத்துப் பழகித்தேர்ந்த அநுபவமுதிர்ச்சியால் அடைந்த) ஒப்பற்ற சாமர்த்தியத்தால் (ஒவ்வோர் உறுப்பையும் இவ்விவ்வாறுசெய்யவேண்டுமென்று) தெரிந்துகொள்ள ஆலோசனைசெய்து, மூன்றுலகத்திலுமுள்ள (ஆண்பாலார் பெண்பாலா ராகிய) இருவகையாருக்கும் வடிவழகுக்கு முடிவெல்லையாகச் சிருட்டிக்கப்பட்டவர் இவ்விருவர் என்றெண்ணினள்.

பொருதல்—போர்செய்தல். திறம்—வலிமை. பூவை—நாகணவாய்ப்பறவை (பின்சொற்போலும் இனியசொல்லுடைய சீதை). மற்று அசை. ஒரு—ஒப்பற்ற. திறம்—திறமை—சாமர்த்தியம். திறத்து என்பதில் ஆல்உருபு தொக்கது. நோக்கி—நினைந்து (பரிபாடல், ஐங்குறுநூறு)—ஆலோசித்து (ப்பார்த்து). உரு—வடிவு (பரிபாடல்); உடம்பு (இலக்கியச்சொல்லகராதி). திறம்—விதம் (ஐங்குறுநூறு) —வகை. செய்யுளாதலால் வரம்பாகச் செய்தவரெனற்பாலது செய்த வரம்பு எனப்பட்டது. கருதமற்றினிவேறில்லை என்பதை 'இருவர்' என்பதன் பின்பு இயைத்து இவர்கள் இவ்வளவு அழகு வாய்ந்தவராயிருத்தற்குக் காரணம், இப்படிப்பட்ட இருவரைச் சிருட்டிக்கவேண்டுமென்று பிரமன் சிருட்டித்தானென்பதே: இதன்மேல் வேறு (ஏற்ற காரணம் யாதும்) கருதுதற்குரியதில்லையென்று பொருள்கொள்ளலும் பொருந்தும்.

சூர்ப்பநகை, ஆணழகில் ஒப்பும் உயர்வும் இல்லாத இராமனையும் அவ்வாறே பெண்ணழகில் ஈடும் எடுப்பும் இன்றிய சீதையையும் தனித் தனியாக மாறிமாறிப்பார்த்தும் ஒருசேரப்பார்த்தும் ஒருவருக்கொருவர் ஒத்த உருவப்பொருத்தமுடைமையாற் சரிஇணையான சமசோடியாய் இனிதியைந்த இரட்டையரா யிலங்கும் இனிய காட்சியைக் கண்ணுங் கருத்துங் குளிரக் கண்டு, கழிபெருங்களி மிகுந்து, அந்தக் காட்சிக்கு மூலகாரணனுன பிரமனை நினைந்து, அவன் அழகிய ஆடவர் மகளிரனைவரினுஞ் சிறந்த அழகுடைய நம்பி ஒருத்தனையும் நங்கை ஒருத்தியையும் உண்டாக்கக்கருதித், தான் முன்படைத்த அழகிற்

சிறந்தா ரொவ்வொருவர்பால் "ஒன்றென்றே விரும்பற் கொத்த"தா யிருந்த தனித்தனி வனப்புக்க ளனைத்தையும் சேரத் திரட்டிச் சிருட்டித்த இரட்டையர் இவ்விருவரென் றெண்ணினு ளென்பதாம்.

சூர்ப்பநகை, இணைந்திருந்த சீதாராமதம்பதிகளை வியக்கும் இக் கவி, சுக்கிரீவன், ஒன்றுசேர்ந்திருந்த இராம லக்குமண சகோதாரை வியக்கும் இரண்டுகவிகளை நினைவுகூரச்செய்கின்றது. அவ் இருகவிக ளும் இவ் ஒருகவியோடு சேர்த்துநோக்குதற்கு ஏற்றசிறப்புடையவைக ளாயிருத்தலால், அவைகளைத் தருகின்றேன்:—

நோக்கினுன்; நெடிது நின்றான்; நொடிவரும் கமலத் தண்ணல்
ஆக்கிய உலக மெல்லாம் அன்றுதொட் டின்று காறும்
பாக்கியம் புரிந்த எல்லாம் குவிந்திரு படிவ மாகி,
மேக்குயர் தடந்தோள் பெற்று, வீரராய் விளைந்த! என்பான்.

தேறினன் அமரர்க் கெல்லாம் தேவராம் தேவரன்றே,
மாறிஇப் பிறப்பில் வந்தார், மானுட ராகி மன்னோ!
ஆறுகொள் சடிலத்தானும் அயனுமென் றிவர்க ளாதி
வேறுள குழுவை யெல்லாம் மானுடம் வென்ற தன்றே!

(நட்புக்கோட் படலம் கஅ, கக.)

[மேற்கூறியவாறு சூர்ப்பநகை, தன்னை மறந்து, இராம சீதைய ரிருவரழகிலும் ஈடுபட்டு, இறும்பூதெய்தியிருந்தபோது, அவளுக்குத் தன் நினைவு வர, அந்நினைவை அடுத்து இராமனைமோகித்த முன் நினைவும் வர, அம் முன்நினைவுக்குச் சீதை இடையூறாயிருக்கின்று ளென்ற வெந்நினைவு தோன்ற, அவளை விரும்பிடலற்று, வெறுத்திட லாறு, 'இவள், இவன் இல்லா ளில்லை; என்னைப்போல இவனை மோகித்து இடையே வந்தயள்; இவளை இவன் இகழச்செய்வேன் என்று மனத்துள் நினைத்து, இராமனைநோக்கி "இங்குவந்த இவள் இராட்சசி: இறைச்சி தின்பவள்: இவள் வடிவம் இயல்பானதன்று; மாயமானது: இவளைக் காண யான் அஞ்சுகின்றேன்: தூரத்துவாயாக" என்று (தன் இயலையும் செயலையும் சீதைமேலேற்றிக் கூறித், தான் தூரத்துண்ணற் பாலளாயிருக்க, அவளைத் தூரத்தச்) சொன்னாள். இராமன் "உன் அறிவு நன்று. உண்மையை உன்னை அறியவொட்டாமல் ஒளிக்கவல்லா

ருளரோ? உன் நல்லுரையால் உன் நல்லுள்ளம் நன்குவிளங்கியது. இந்தக் கள்ள அரக்கியைச் செவ்வையாகப் பார்" என்று சிரித்தான். அப்போது, சீதை இராமனை அணுகக்கண்டு, சூர்ப்பநகை, சினந்து "அடீ! நீ எங்களுக்கு இடையே எப்படிவருவாய்!" என்று அதட்டினாள். அவள் தமயன் இராவணன் வெள்ளிவெற்பை வேரோ டசைக்க மெய்ந் நடுங்கி வெருவி அம்பிகை அரனை ஆலிங்கனஞ்செய்துகொண்டது போலவும் மேகம் இடிக்கக் கேட்ட குழந்தை பயந்து தாயைக் கட்டிக் கொள்ளுதல்போலவும், சானகி அஞ்சித் தாசரதியைத் தழுவிக் கொண்டாள்.

அப்போது, அரக்கரோடு தொடங்குவது, விளையாட்டானாலும், துன்பமாய்முடியுமென்று, இராமன் உணர்ந்து சூர்ப்பநகையைநோக்கித் "துன்பமான காரியம் ஒன்றும் செய்யாதொழிவாயாக: உன் தன்மையை என் தம்பி அறிந்தாற் கோபிப்பான்" என்றான். அவள், "மலரில் வாழும் மறையோனும் வாரியுள்வைகும் மாயோனும் மலைமிசைவதியும் மழுவோனும் மன்மதனும் மற்றைத் தேவர்கள் யாவரும் என்னை அடையத் தவஞ்செய்கின்றார்கள். அப்படிப்பட்ட என்னை இந்தக் கள்ளிமேலுள்ள காதலால் எள்ளுவாயாயினுப். இது ஏற்றதன்று" என்றாள். அவன், இவளோடு இனிப் பேசலாகாதென்று சீதையுடன் பன்னசாலையுள்ளே, மின்னினோடு மேகம்புகுந்தாற்போலப், போனான்.

இராமன் மறையவே, சூர்ப்பநகை, உணர்வோடு உயிரும் ஒருவினை ளென்னும்படி, உயிர்ப்படங்கி, ஒடுங்கி நின்றாள். பின்பு, ஒருவாறு தேறி, அவனை அடையும் உபாயத்தை ஆராய்ந்துகொண்டு அப்பாற் போனாள். செங்கதிரோன் மேற்றிசையிற் செல்லச் செவ்வானம் திகழ்ந் தது. சிறிதுபொழுது சென்று திங்கள் உதயஞ்செய்தது. தாடகை மார்பில் தாசரதிசரம் தைத்ததுபோலச், சூர்ப்பநகை நெஞ்சில் அநங்கன் அம்புகள் அழுந்த, விடமேறல்போல விரகமேற, வெருண்டு வருந்தினாள். மோகத்தீயை மூண்டு வளருமாறு, திங்கள் நிலவெறிக்கத் தெண்கடல் அலையொலிக்கத் தென்றல்வீச, அன்றில் கூவ, அவள், விரகவேதனை மிகுந்து, "மோகத் துக்கோர் முடிவுமுண்டாங்கொலோ" என்று, "ஆவி ஒயினும் ஆசையின் ஒய்விலாள்" ஆய், இரவுமுழுதும் வருந்தியிருந்தாள்.

பூமியில், எங்கும் பரந்த இராக்கதரை ஒழிக்க, இராமன் தோன்றியதுபோல, இருளை அகற்றச் சூரியன் தோன்றினன்.

இரவோடு தன் காமமூம் ஒருவாறு விடிய, விடியலைக் கண்டதனால், தன் உடம்பைவிட்டு ஏகலுற்ற உயிர் மீளலுற்றிடக்கண்ட சூர்ப்பநகை, 'இராமனை எய்தும் உபாயம் ஏறவென எண்ணினேன். அது, இரவுள்ள வரையும் விரகமேலீட்டால் விளங்காதிருந்தது; விடியல் வர, விரகங்குறையலுற்றபோது, விளங்குவதாயிற்று. அது இதுவே. அவள் அவன் அருகிருக்குமளவும் அவன் என்னைப் பாரான். அவளைத் தூக்கிக்கொண்டுபோய் ஓரிடத்தில் ஒளித்துவைத்துவிட்டு அவனோடு வாழ்வேன். அந்த வாழ்வே வாழ்வு மற்ற வாழ்வு: மாள்வே.' என்றெண்ணினாள்.

அவ்வாறெண்ணியவள், இராமன் இருப்பிடத்தை எய்தி, அவன் ஆற்றங்கரையில் அமர்ந்து சந்தியாவந்தனம் செய்துகொண்டிருக்கக் கண்டனள்: தம்பி, சாலையிலிருந்த சானகியைச் சோலையிலிருந்து காவல் காத்தலைக் கண்டிலள். 'தனியேயிருக்கின்றாள்; சமயம்வாய்த்தது; தாமதஞ்செய்தலாகாது.' என்று எண்ணி, விரைந்துசென்று, சீதையைத் தூக்கிக்கொண்டுபோகத் தொடர்ந்தாள். அதைச் சோலையிருந்து காவல்செய்துகொண்டிருந்தவன் கண்டு, முடுகிவந்து, பெண்கொலை கூடாதென்றெண்ணி, உயிரைக் கொல்லாமல் உறுப்பைக் குறைக்க உன்னிக், கூந்தலைப் பற்றிக்கொண்டு, வயிற்றிலுதைத்து, வாளையெடுத்தான். அதை அவள் கண்டு கோபங்கொண்டு அவனைத் தூக்கிக்கொண்டு விண்ணிற் செல்ல எண்ணி எடுக்கத் தொடங்க, அவன், அவளை எளிதாக (அலட்சியமாய் அநாயாசமாக)க் கீழே தள்ளிக் கையிற் பிடித்திருந்த கத்தியினால் காதையும் மூக்கையும் களைந்து, கடுத்தசினத்தை விடுத்துப் பிடித்த கூந்தலையும் விடுத்தான். அவள் கதறி யலறிக் கடுங்கூச்சலிட்டாள்.

இலக்குமணன் சூர்ப்பநகையை உறுப்பறுத்து வடுப்படுத்தியது, இராமன் இராவணனைத் தலையறுத்தற்கு நாட்செய்தது போன்றது. இரத்தம் பொழியும் அவள் கறுத்த உடம்பு, சோரிமாரி சொரியும் கார் மேகத்துக் கொப்பாய் அரக்க ரழிவை முன்னறிவிக்கும் துன்னிமித்தம் போன்றது.]

சூர்ப்பநகை வேதனையால் வாதனைப்படல்.

375. உயரும் விண்ணிடை; மண்ணிடை விழும்; கிடந் துழைக்கும்;
அயரும்; கைகுலைத் தலமரும்; ஆருயிர் சோரும்;
பெயரும்; பெண்பிறந் தேன்பட்ட பிழையெனப் பிதற்றும்;
துயரும் அஞ்சிமுன் தொடர்ந்திலாத் தொல்குடிப் பிறந்தாள்.

இ-ள். (தேவர் முதலியோர் அணுக அஞ்சியதுபோலத்) துன்ப மென்பதும் பயந்து கிட்டவந்திலாத பழமையான இராக்கதக் குடும்பத்திலே பிறந்த சூர்ப்பநகை, (புண்ணின் வலியால்) விண்ணில் எழுவாள், மண்ணில் விழுவாள், (படுத்துக) கிடந்து வருந்துவாள், உணர்வழிவாள், (வேதனைபொறுக்கமாட்டாமல்) கைகளைவிரித்தசைத்து மனஞ் சுழல்வாள், உயிர்சோர்வாள், (சோர்தலுற்ற உயிர்) மீள்தலுறுவாள், பெண்ணாகப்பிறந்த யான்பட்டசிறுமை (என்னே!) என்று பல முறை குளறிக் கூறுவாள் (ஆனாள்).

உழைத்தல் - வருந்தல். அயர்தல் — உணர்வு அழிதல் (தமிழ்ச் சொல்லகராதி) குலைத்தல் - அசைத்தல் (தமிழ்ச்சொல்லகராதி). அலமரல் - மனம் சுழலல். ஆருயிர் - அருமையான உயிர். சோர்தல் - தளர்தல். பெயர்தல் - மீளுதல் (ஐங்குறுநூறு, புறப்பொருள்வெண்பாமாலை). பிழை - சிறுமை (தமிழ்ச்சொல்லகராதி). 'பிழை' யென்பது, சூர்ப்பநகை துன்பமிகுதியால் முடியும் சொல் கூறப்பெறாததாய், முடிவு பெறுதற்கு 'என்னே' என்னும் சொல்லை அவாவிநின்றது. பிதற்றல், மயக்கத்தோடு குளறிப் பலமுறைகூறலைக் குறித்தது. 'பெண்பிறந்தியான் பட்டபழி' யென்பதும் பாடம்.

அங்கபங்கமும் அதனால் அடைந்த வெட்கமும் உடையார்செயல்கள் இக் கவியில் விவரித்துக் கூறப்பட்டன. இராமனைப் பிரிந்த பிரிவாற்றாமைத்துயரால் வருந்தும் சீதையின்செயல்களைக் காட்சிப்படலத்தில் அடுக்கிக்கூறும் கவிதை இக்கவி நினைவுறுத்துகின்றது. அக் கவியாவது,

"விழுதல் விம்முதல் மெய்யுற வெதும்புதல் வெருவல்
எழுதல் ஏங்குதல் இரங்குதல் இராமனை யெண்ணித்
தொழுதல் சோருதல் துளங்குதல் துயருழந் துயிர்த்தல்
அழுத லன்றிமற் றயலொன்றும் செய்குவ தறியாள்" என்பது.

இப் பாட்டின் ஈற்றடி இனிய கவித்திறத்தைக்காட்டுவது. அதில், செய்வான் தன்மை (கர்த்திருத்தவம்) இல்லாத 'துயர்', அஃதுடையது போல, வியப்பும் நயப்பும்விளையக் கூறப்பட்டிருக்கின்றது.

இராவணன்மட்டும் துன்பமறியாதவனன்று, அவன் அவனுடன் பிறந்தாராகியவர்களுடைய தற்காலத்தியகுடும்பங்களிலுள்ளாரெல்லாரோடு அவனுடைய முற்காலத்திய பல தலைமுறைக்குடும்பத்தினாவைரும் துன்பமறியாதவரென்பது குறிக்க, அவனுடைய குடிக்குத் 'தொல்' என்னும் அடைகொடுத்துத் 'தொல்குடி' என்றார்.

உயிரோடுமுடிந்துவிடுகின்ற உயிரிழத்தற்றுன்பத்திலுங் கொடியதாய் நெடியதாய் வருத்தும் மானமிழத்தற்றுன்பம் துன்பமேயறியாத தொல்குடிப்பிறந்த சூர்ப்பநகைக்கு எத்துணைவருத்தம் விளைக்குமென்பதை உய்த்துணரவைத்தார்.

இங்கே துன்பமறியாத சூர்ப்பநகை மிகவும் துன்புற்றாளென்பதை உணர்த்துமாறு "துயரும் அஞ்சிமுன் தொடர்ந்திலாத் தொல்குடிப் பிறந்தாள்" என, நெடுங்காலமாக உள்ள பழமையான அவள்குடும்பத்தாரொருவரும் துன்பமறியாரென்ற நயமும், வாலிவதைப்படலத்தில் இராமன் அம்புபட்டு இறக்கும்நிலையிலிருந்த வாலியைக் காணுமுன் துன்பமென்பதின்னதென்றறிந்திராத அவன் மகன் அங்கதன் கொடுந்துன்பமுற்றானென்பது குறிக்க, அவன் "இடருடை உள்ளத்தோரை எண்ணினும் உணர்ந்திலாதான்" எனத், துன்பமுள்ளவர்களென்று சொல்லப்படுகிறவர்கள் எத்தன்மையாராயிருப்பாரென்று தெரிய முயன்று சிந்தித்துப்பார்த்தாலும் தெரியமாட்டாத சிறுபிள்ளையாயிருந்தானென்ற நயமும் ஆகிய இருவகை நயங்களும், ஒருசேரவைத்து ஒன்றுக்கொன்றுள்ள ஒற்றுமை வேற்றுமைகளை ஒப்பிட்டு நோக்கி ஓர்ந்து உணர்ந்து உவத்தற்குரியன.

[சூர்ப்பநகை, செந்நீர் சிந்தும் செவியையும் நாசியையும் சேலை கொண்டொற்றினாள்; நெடுமூச்செறிந்தாள்; நிலத்தில் அறைந்தாள்; தனக்கு உற்ற குற்றத்தை நோக்கச் சுற்றத்தாரைக் கூவியழைப்பாளாயினாள்:—

மழுவெடுத்த கறைமிடற்றன் மலையெடுத்த மலையே! அட்டதிக்கும் உற்று அட்டபாலரை அடர்த்து வெற்றிபெற்ற வீரனே! எட்டுத் திக்கி

யானைகள் முட்டிப்பாயப் பறிப்பொண்ணுது முறிப்புண்ட மருப்புக்கள் பதக்கம்போல அழகுசெய்யும் பாரமார்பானே! அண்ணுவோ! அண்ணுவோ! இங்கே வாராயோ! என் நோவைப் பாராயோ! உன், ஆணைக்குள்ளடங்கிய உலகத்திலே, சிலையேந்தித் திரிகின்ற சிறுமனிதர் செய்த தீங்கினுல், யான் நொந்து வருந்துவதை நீ வந்து பாராயோ; உன்னுற் புறங்காக்கப்பெற்றுள்ள என்னை இவர்கள் இவ்வாறுசெய்ததனுல், புலி பின்னேயிருக்கப் புலிக்குட்டி பிடிபடாதென்று பூமியில் வழங்கும் பொய்யாமொழி பொய்ம்மொழியாய்ப் போயிற்றே! இந்திரன்முதலோர் ஏவல்செய்ய வேத்தவையில் வீற்றிருக்கும் உன் சமூகத்தில் மூக்கறையும் காதறையுமான யான் முகங்காட்டுவ தெவ்வாறு?

தேவசேனையைச் செயித்து, இந்திரனை இறுகப்பிணித்துக் கொணர்ந்து, இலங்கையிற் சிறையிலிட்டு இந்திரசித்தென்னும் பேரும் பிரசித்தியும் பெற்ற மருகோனே! என் வருத்தத்தைக் காண் நீயேனும் வாராயோ!

என் கூக்குரலைத் தூரத்துள்ள சுற்றத்தார் கேட்கவில்லையாறுலும் பக்கத்துள்ள கானே! நீயேனும் கேட்டு யான் படும்பாட்டைப் பார்க்க வாராயோ! நீயிருக்கும் வனத்தில் எனக்கு இந்தக் கதி நேரலாமோ! என்று சூர்ப்பநகை இரைந்து கரைந்து உருண்டு புரண்டுகொண்டிருக்கும்போது, இராமன் செபத்தைமுடித்துவிட்டுத் திரும்பிவந்தான்

அவள், அவனை நோக்கி "உன்பால் யான் வைத்த அன்பால் எனக்கு நேர்ந்த கதியைப் பார்" என்று எதிரே ஏங்கி விழுந்து அலறிக் கதறி அழுதாள் அவன், 'இவள் ஏதோ தீங்கு செய்திருக்கின்றுள்: அதற்காக, இளையோனே இவள் செவியையும் நாசியையும் சேதித்திருக்கின்றுன்' என்று தெரிந்துகொண்டு அவளை "ஆர் நீ?" என்றுன். அவள் "என்னை அறியாயோ! பகை யென்ற பெயரும் இல்லையாம்படிகண்டு, மூன்றுலகத்தையும் தன் அடிப்படுத்துத் தனியரசாளும் தசமுகனுக்குத் தங்கை" என்றுள். "எதற்காக இங்கே வந்தாய்?" எனக் "காமவெம்பிணிக்கு மாமருந்தே! யான் நேற்று வந்தேனில்லையோ?" என்றுள். "திருமகளென உருவுகொண்டு நேற்று வந்தவர் நீர்தாமோ' என, "மூக்கையும் காதையும் போக்கிவிட்டால், ஆர்க்குத்தான் அழகு அழியாதிருக்கும்?" என்றுள்.

இராமன் இலக்குமணனை நோக்கி "இவளை இவ்வாறு செய்ய, இவள் இழைத்த பிழை யாது?" என, இளையவன் "தின்ன எண்ணியோ, வேறென்ன எண்ணியோ சீதையைத் தூக்கச் சினத்தோடு தொடர்ந்தாள்" என்றான்.]

சூர்ப்பநகை சீதையைத் தொடர்ந்த காரணத்தைச் சொல்லுதல்.

376. ஏற்றவளை வரிசிலையோன் இயம்பாமுன், இகல்அரக்கி,
"சேற்றவளை தன்கணவன் அருகிருப்பச் சினம்திருகிச்
சூற்றவளை நீர்உழக்கும் துறைகெழுநீர் வளநாடா!
மாற்றவளைக் கண்டக்கால், அழலாதோ மனம்?" என்றாள்.

இ-ள். இலக்குமணன் (கூறப்புகுந்ததைக்) கூறிமுடிக்குமுன்பு, சூர்ப்பநகை, "சங்கு (ஒன்று) தன் கணவன் (ஆகிய ஆண் தவளையின்) அருகே யிருக்கக் (கண்டு,) கருவுற்றிருந்த பெண் தவளை கோபத்தால் மாறுபாடுகொண்டு நீரைக் கலக்குகின்ற வளத்தையுடைய நாட்டினனே! சக்களத்தியைப் பார்த்தால், மனம் (பொறுமையால்) கொதியாதோ?" என்று சொன்னாள்.

ஏற்ற – எடுத்த (சிந்தாமணி 1979) வரி—கட்டு. ஏற்ற வளை வரி சிலையோன்—(கையில் ஏந்திய வளைந்த கட்டமைந்த வில்லையுடையோன் (ஆன இலக்குமணன்). 'ஏற்ற' என்பதற்குத் தகுதியான என்றும் (நாண்) ஏற்ற என்றும் பொருள் கூறலாம். இகல் அரக்கி—பகையையுடைய இராட்சசி; பகைக்கின்ற இராட்சசி (ஆன சூர்ப்பநகை). சேற்ற, சேறு என்னும் பெயரடியாகப்பிறந்த குறிப்புப் பெயரெச்சம்; சேற்றினிடத்த (தாகிய) என்னும் பொருட்டு வளை—சங்கு. திருகல்—முறுகல் (-கடுமைபடல்; முதிர்தல்); வேறுபடல். (சிலப்பதிகாரம்). சினம்திருகி-கோபம் முதிர்ந்து; கோபத்தினால் (மனம் வேறுபட்டு. சூல்-கருப்பம். உழக்கல்—கலக்கல். துறை—நீர்த்துறை. கெழுதல்—பொருந்துதல். மாற்றவள்—சக்களத்தி. கண்டக்கால்—கண்டால். அழலல்—எரிதல்; காந்துதல்; கோபங் கொள்ளல்; பொறுமைகொள்ளல். (தமிழகராதி).

சூர்ப்பநகை-"தான் இராமனைக் கொழுநனாகக் கொள்ளுதற்கு மிக்க விருப்பங்கொண்ட மாத்திரத்தால் தன்னை அவனுக்குரிய மனைவியாகப் பாவித்து அவ் வுறவுமுறைமையால் அவன் மனைவியான சீதையைத் தனக்குச் சக்களத்தியாகத் துணிந்து அதுபற்றி அவள்மீது பகைமை

கொண்டு அவளைத் தூத்திவிடத் தொடர்ந்ததாகக் காரணம் விவரித்துக்கூறினளென்பது தெளிவாம்.

"இச் செய்புள் திரிபு என்னும் சொல்லணியாயமைந்ததாதலானும், ஓரடியிற் கூறியவாறு மற்றோரடியிலும் பொருள்கூறுதல் மரபன்றென்றும், அங்ஙனங்கூறினல் கவிசமத்காரம் கெடுமென்றும் கூறுவராதலானும், சேல்+தவளை எனப் பிரித்து மூன்றும் அடியில் வந்த தவளையென்பதற்குள்ள பொருளையே கூறுதல் சிறப்பன்றெனக் கொள்க. 'பெண்ணறி வென்பது பெரும்பே தமைத்து' ஆதலால் தன் கணவனருகில் தன் இனத்தினுந்தாழ்ந்த ஈரறிவுயிரான சங்கு இயல்பிலிருத்தலை நோக்கியும் பெண்தவளை மனம்பொறாது இங்ஙனம் சினந்ததென்க".

"பகுத்தறிவிற் குறைவுபட்டதானதோர் அஃறிணையுயிராகிய தவளையானது தான் சூல்கொண்டு கலவிக்குரியதல்லாத நிலைமையிலிருந்தும் தன் கணவன்பால் அயற்பெண்பாலிருத்தலை நோக்கிப் பிணங்கும் நாட்டிலுள்ளவனான நீ, என்போன்ற விவேகிகள் கலவிக் குரிய பருவத்திற் கணவனருகில் மாற்றாளிருத்தலை நோக்கி மனம்பொறாதும் மாற்றாளுக்குக் கேடுசூழக் கருதல் இயல்பே என்பதை அறிதற்குரியாய் என்பாள், இங்ஙனம் சந்தர்ப்பத்துக்கு ஏற்ற நாட்டுவர்ணனை கூறி ஸ்ரீ ராமபிரானை விளித்தாள்".

உரையால் நளன்போலவும் உருவத்தால் வேறொருவன்போலவும் தோன்றின நளனை நளனெனத் தெளியமாட்டாது திகைத்த அவன் மாமன் வீமன் அவனைநோக்கிக் கூறியதாக நளவெண்பாவில் உள்ள ஒரு பாட்டு இந்தப்பாட்டுப்போலச் சந்தர்ப்பத்துக்குத்தக்க நாட்டுவருணனையுடையதாதலால், இதனோடு அது ஒப்பிட்டுநோக்குதற்குரியது. பூகத்தின்பாளையை நாகத்தின்படமென்று குரங்கு மயங்கித் தெளியாதிருக்கின்ற திருநாடா! உன்னை ஒளியாமல் உன் உண்மையுருவத்தைக் காட்டுவாயாக என்னுங் கருத்துடைய அப்பாட்டு வருமாறு:—

பைந்தலைய நாக பணமென்று பூகத்தின்
ஐந்தலையின் பாளைதனை ஐயுற்று—மந்தி
தெளியா திருக்குந் திருநாடா! உன்னை
ஒளியாது காட்டுன் உரு.

(தொடரும்.)

வே. ப. சுப்பிரமணியமுதலியார்.

நம்பியாண்டார் நம்பிகாலம்.

தேவாரத்திருமுறைகளைத் தமது வழிபடுகடவுளான பொல்லாப் பிள்ளையாரருள்கொண்டு இருக்குமிடம் இஃதெனச் சொல்லிபவர் நம்பி யாண்டார்நம்பி என்பது உலகினர் அறிந்ததொருவிடயம். அவர் கி. பி. 1070 முதல் 1118 வரை அரசாண்ட முதற்குலோத்துங்கன்காலத்தவ ரென்று சிலரும், 907 முதல் 947 வரை அரசாண்ட பராந்தகன்காலத் தவரென்று ஒரு சாராரும், இராஜராஜ அபயகுலசேகரமன்னனென்று திருமுறைகண்டபுராணத்துக் கூறப்படுதலால், கி. பி. 985 முதல் 1012 வரை அரசாண்ட கீர்த்திவாய்ந்த முதலாம் இராசராசன்காலத்தவர் என்று ஒருசிலரும் கூறுவர். இவ்வாறு பலதிறப்படக்கூறுவராயினும், ஒருவராவது அவர் கொண்ட கொள்கைக்கு உற்ற சாதனங்கள் இவை யென்று காட்டினாரில்லை. ஆகவே நம்பியாண்டார்நம்பிகாலம் இதுதா னென்று திட்டமாகக் காணவேண்டியது அவசியமாகிறது.

நம்பிபுகழ் அழியாது என்றென்றும் நின்றுநிலவுவதற்குக் காரணமா யிருப்பது அவர் சைவத்திருமுறைகளைக் கண்டெடுத்ததுவேயாகும். இந்த வரலாற்றைக்கூறும்பாகத்துக்குத் திருமுறைகண்டபுராணம் என்று பெயர். அதன் முதற்செய்யுளிலே,

"உலகமகிழ் தருசைய மீது தோன்றி
யோவாது வருபொன்னி சூழ்சோ ணாட்டின்
திலகமென விளங்குமணி மாட வாரூர்த்
தியாகேசர் பதம்பணிந்து செங்கோ லோச்சி
யலகில்புகழ் பெறு ராச ராச மன்னன்
அபயகுல சேகரன்பா லெய்து மன்பர்
இலகுமொரு மூவருள் பதிக மொன்றேன்
றேயினிதி னுரைசெய்ய அன்பாற் கேட்டு"

என்று காணப்படுகிறது.

பின்னர் அரசன், கையிரண்டும் உச்சிமேலேறக் கண்ணீர் கரைந்தோட மெய்ம்முழுதும் புளகம்போர்ப்ப ஐயன் மலர்ப்பாதம் உளத்தே கொண்டுபோற்றுதற்கரிய திருமுறைதேட, எங்கும் அகப்படாமையாலே நைந்து வருந்தினான். இவ்வாறு வருந்திக்கொண்டிருக்கையில், திருநாரையூரில் நம்பிபாண்டார்நம்பிபின் அருஞ்செயல் அரசனுடைய காதுக்கெட்டியது. இவராலே தனது எண்ணம் நிறைவேறலாமென்றெண்ணி, "மல்லன்மிகு சேனையுடன் இராசராச மன்னவனும் அந்நகரில் வந்துசேர்ந்தான்". வந்து தனது குறையைத் தெரிவிக்கப் பிள்ளையாரருள்கொண்டு நம்பியும் திருமுறை சிற்சபேசன் ஆநந்தத் தாண்டவம் செய்யும் பொன்னம்பலத்தின் மேல்புறமுள்ளதென்று கூற, அதன்படியே திருமுறையும் கண்டுபிடிக்கப்பட்டது. பின்னர்ச் சிவாலயந்தோறும் தேவாரத்திருமுறை எழுதிவைத்துப் பூசைசெய்யப்பட்டுவந்தது[1]. இதனாலே நம்பிபாண்டார்நம்பிகாலத்திருந்த மன்னவனுக்கு இராசராசன் என்றும், அபயன் என்றும், குலசேகரன் என்றும் பெயர் வழங்கிவந்ததெனக் கூறலாம்.

நம்பியாண்டார்நம்பி நாமியற்றிய திருத்தொண்டர்திருவந்தாதியிலே,

1 புலமன்னியமன்னனைச்சிங்களநாடுபொடிபடுத்த
குலமன்னியபுகழ்க்கோகனநாதன்குலமுதலோன்
நலமன்னியபுகழ்ச்சோழனதென்பர்நகுசுடர்வாள்
வலமன்னியவெறிபத்தனுக்கீந்ததொர்வண்புகழே. (௫௰)

---

1 சீகாழிப்பதியிலே ஞானசம்பந்தப்பெருமானாலயம் கருப்பக்கிரகத்தின் மேல்புறம் காணப்படும் கல்வெட்டுப் பின்வருமாறு:—திரிபுவன சக்கரவர்த்திகள் குலோத்துங்கசோழதேவர்க்கு யாண்டு ௪-வது இராஜாதிராஜ வளநாட்டு[த்] திருக்கழுமலம் கறகடகநாயி(ற்)று முதல் கிராமகாரியஞ்செய்கிற பெருமக்களேம் ஆளுடையபிள்ளையார் திருமாளிகைத் தமிழ்விரகர் கண்டு இக்கோயிற் திருக்கைக்கோட்டியில் எழுந்தருளியிருக்கிற° திருமுறைகள் திருக்காப்புநீக்கி அழிவுள்ளன எழுந்தருளிவித்தும் திருமுறைகள் எழுந்தருளிவித்தும் திருமுறை பூசித்து மிருக்கைக்கு......காசுகொள்ளா இறையிலியாக இட்டநிலம்............ [இதனாலே திருமுறைகள் காப்பாற்றப்பட்டவிதமும், திருவிடைவாய்த்தேவாரக் கல்வெட்டால், கற்சிலை பதித்திருந்த நிலைமையும் விளங்கும்.]

சிங்கத்துருவனைச்செற்றவன்சிற்றம்பலமுகடு
கொங்கிற்கனகமணிந்தவாதித்தன்குலமுதலோன்
திங்கட்சடையர்தமரதென்செல்வமெனப்பறைபோக்
கெங்கட்கிறைவனிருக்குவேளூர்மன்னிடங்கழியே. (சுரு)

செம்பொனணிந்துசிற்றம்பலத்தைச்சிவலோகமேய்தி
நம்பன்கழற்கீழிருந்தோன்குலமுதலேன்பர்நல்ல
வம்புமலர்த்தில்லையீசனைச்சூழமறைவளர்த்தா
னிம்பருந்தொங்கற்கோச்செங்கணானை னுநித்தனையே. (அஉ)

என மூன்றுசெய்யுட்கள் காணப்படுகின்றன. இவற்றுள் முதலாவது செய்யுளுள்ளே கோகனநாதனை (சூரியனது மறுபெயரான) ஆதித்தன் வேற்றுப்புலஞ்சென்றும் சிங்களநாட்டைப் பாழ்படுத்தியும்வந்ததோடு தன் குலத்தையும் மேலாகச் செய்தான் என்பதொரு செய்தி பெறுகின்றோம். இரண்டாவது செய்யுளாலே கோகனநாதன் ஆதித்தன் என்பது உறுதியாவதோடு நரசிங்காவதாரமெடுத்த திருமாலைச் செற்றவனாகிய நடராசப்பெருமானது சிற்றம்பலத்தின் மேற்பரப்பைக் கொங்குதேசத்துப் பொன்னால் அணிந்தவன் என்றும் அறிகின்றோம். மறுபடியும் மூன்றாவது செய்யுளிலே சிற்றம்பலத்தைச் செம்பொன்வேய்ந்த செய்தி உறுதிபெறுவதோடு செம்பொன் அணிந்த அரசன் சிவபெருமானது திருவடிநீழலையடைந்துவிட்டானென்ற செய்தியும் கிடைக்கின்றது. புலவராயுள்ளார் ஒருநூல் செய்கின்றகாலத்துத் தம்மையாதரிப்பவனைத் தமது நூலில் இடையிடையே புகழ்ந்துகூறுதல் கவிமரபு என்பர். நமது நம்பியும் இதற்கு விலக்கு ஆகாதவரேயாம். ஆதலால் நம்பியாண்டார்நம்பியையாதரித்த அரசன் ஆதித்தன் என்றும், அவன் சோழவரசனென்றும், இருக்குவேளூரிலிருந்த அரசபரம்பரையைச் சார்ந்தவனென்றும் அறிகிறோம். ஆயினும், திருமுறைகண்டபுராணத்திலே இராசராசன், அபயகுலசேகரன் என்று சொல்லியிருக்க, ஈண்டு ஆதித்தனென்று காணப்படுவது மாறுகொளக்கூறலாயமையாதோவெனின் அவ்வாறு ஆகாது; ஒரே அரசனுக்குப் பலபெயரிருத்தலின். இவ்விபவகாரத்திலும் அம்மாதிரியே யிருக்கலாம். ஆகவே நம்பியாண்டார்நம்பி காலத்து அரசன்பெயர்—

1. ஆதித்தனென்றிருக்கவேண்டும்.

2. அவனுக்கே இராசராசன், அபயன், குலசேகரன் என்ற பட்டங்களோ வேறு பெயர்களோ இருக்கவேண்டும்.

3. அவன் சிங்களநாட்டை அழித்தவனாக இருக்கவேண்டும்.

4. பொன்னம்பலத்தைப் பொன்வேய்ந்தவனாக இருக்கவேண்டும்.

5. இவர்காலத்திலேயே அவன் சிவபெருமானது திருவடிநீழலை அடைந்திருக்கவேண்டும்.

6. சோழபரம்பரையினனாய் இருக்குவேளூரில் உறவுடையவனாக இருக்கவேண்டும்.

இந்த ஆறு விடயங்களிலும் ஒற்றுமையுடையவனே இவர்காலத்தரசனாவான்.

முதலில் ஆறாவதான சோழபரம்பரையையும் இருக்குவேளூரையும் ஆராய்வோம். இடங்கழிநாயனார்புராணத்திலே,

"எழுந்திரைமாகடலாடையிருநிலமாமகண்மார்பில்
அழுந்துபடவெழுதுமிலைத்தொழிற்றொய்பிலணியினவாஞ்
செழுந்தளிரின்புடைமறைந்தபெடைகளிப்பத்தேமாவின்
கொமூங்துணர்கோதிக்கொண்டுதுபினாடுகோனாடு" (க)

"முருகுறுசெங்கமலமதுமலர்துதைந்தமொய்யளிகள்
பருகுறுதெண்டிரைவாவிப்பயில்பெடையோடிரையநந்தி
வருகுறுதண்டுளிவாடைமறைபமாதளிச்சூழற்
குருகுறங்குங்கோனாட்டுக்கொடிநகரங்கோடும்பாளூர். (உ)

"அந்நகரத்தினினிருக்குவேளிர்குலத்தரசளித்து
மன்னியபொன்னம்பலத்துமணிமுகட்டிற்பாக்கொங்கிற்
பன்னுதுளைப்பசும்பொன்னாற்பயில்பிழம்பர்மிசையணிந்த
பொன்னெடுந்தோளாதித்தன்புகழ்மரபிற்குடிமுதலோர். (௩)

என்ற பாக்கள் காணப்படுகின்றன. முதற்பாட்டினால், கோனாடு என்று ஒருநாடு உண்டென்றும் இரண்டாம்பாட்டினால் அந்நாட்டிற்குக் கோடும

பாளூர் என்பது தலைநகரென்றும் மூன்றும்பாட்டினால் அதனை ஆண்டவர் வேளிர்களென்றும், அந்தக்கொடியைச்சார்ந்தவனே ஆதித்தன் என்றும் இவர்கள் சோழர்களெனப் பெயர்பெறுவரென்றும் அறிந்துகொள்ளும்படி சேக்கிழார்சுவாமிகள் கூறுகின்றார்கள். இதற்கு அக்காலத்திலே வேறு ஆதாரங்கள் உண்டா வென ஆராய்வோமாயின் அந்நாட்டுக்குக் கடல்கடவாது இலங்கைகோண்ட சோழவளநாடான கோநாடு என்று பேர் என்று 1907-ம் ஆண்டு 131-ம் கல்வெட்டால் அறியக்கிடக்கின்றது. பல்லவவம்சத்தினனாகக் கருதப்படும் [2]கம்பவர்மன் காலத்திற் கோநாட்டுக் கொடும்பாளூர் விடேல்விடுகு இளங்கோவேளார் மனைவி பூதிஅரிஞ்சிகைப்பிராட்டியார் திருவொற்றியூர்ப் படம்பக்கநாதர் கோயிலுக்கு உயிஎ கழஞ்சு பொன் நிவந்தமாக வைத்தாள். இவ்விடேல்விடுகு அரசர்களோடு உறவுடையவனாகவோ, சமஅந்தஸ்து உடையவனாகவோ இருந்தாலன்றி விடேல்விடுகு என்ற பல்லவனது பட்டப்பெயரைத் தரித்திருக்கமாட்டான்.

இராஜகேசரிவர்மனான சுந்தரசோழபராந்தகன் மூன்றுமாண்டில் திருமலாபுரம் என்ற ஊரிலுள்ள நாயனார்க்கு வீரசோழஇளங்கோவேளார் மகன் ஆதித்தன் என்ற பேருடைய மதுராந்தகன் அச்சபிடாரன் சில நிலங்கள் விட்டான்[3]. இச்சுந்தரசோழன்காலத்திற் பராந்தகன் சிறிய வேளார் இருங்கோவேளார் என்பவன் திருவியலூர்ச் சிவயோகநாத சுவாமிக்குச் சில தானம் வழங்கினான்[4]. இவனே திருக்கூடித்திட்டையிற் சிலநிலம் விட்டான்[5]. இவனுடைய சகோதரி பூதி ஆதிச்சபிடாரி என்பவள் சுந்தரசோழனுடைய மனைவிகளில் ஒருத்தி[6]. இவனே சிங்களச்சண்டைக்குச் சென்று அங்கேயே உயிர்துறந்தவன். முதலாம் பராந்தகனது பிள்ளைகளில் ஒருவனான பிள்ளையார் அரிகுலகேசரிக்கு

---

[2] இந்தக் கம்பவர்மனுடைய ஆட்சிக்காலத்திற் சடையன் என்னும் வள்ளல் ஆயிரக்காடிநெல் கொடுத்ததாக ஒரு கல்வெட்டும், ஒருசமயம் ஐஞ்ஞூறுகாடி நெல் கொடுத்ததாக மற்றொரு கல்வெட்டும் கூறும். இவனைப்பற்றி மதுராந்தக உத்தமசோழனது செப்புப்பட்டயமொன்றிற் கூறப்பட்டிருக்கிறது. S. I. I. III. தொகுதி பார்க்க. [3]306 of 06. [4]317 of 07. [5]286 of 11. [6]Epigraphist's Report for 08—09—p 89.

இந்தவமிசத்திலேயே தென்னவன் இளங்கோவேளார்மகள் பூதி ஆதிச்ச பிடாரியை மணஞ்செய்திருந்தது[7].

முதலாம் ஆதித்தன்காலத்தில் இவனைச் செம்பியன் தமிழவேள் என்ற பட்டமும் மற்றும் வரிசைகளும் பெற்ற விக்கிஅண்ணன் என்பவன் கொடும்பாளூர்த் தலைவன். ஆகவே இதுவரையிற் கூறியனகொண்டு கொடும்பாளூர்த் தலைவர்களுக்கும் சோழ அரசர்கட்கும் உறவுமுறை இருந்தது என்று ஏற்படுகிறது. உறவினமுறையாளர் ஆவதற்கு முன்னரே இவர்கள் அந்தக் கொடியைச் சார்ந்தவர்களாயிருந்தாலொழியப் புதியசம்பந்தம் செய்திருக்கமாட்டார்கள். அன்றியும், அவர்களைத் தகுதியான பதவிகளிலும் நியமித்திருக்கமாட்டார்கள். ஆகவே இவர்களும் அந்த வமிசத்தைச் சேர்ந்தவர்களாக இருக்கவேண்டும்.

[தொடரும்.]

சோமசுந்தரதேசிகன்.

மதிப்புரை.

படிக்காசுப்புலவர்சரித்திரம்:—இது, சந்தப்பாக்களியற்றுவதில் முதன்மைபெற்ற செந்தமிழ்க்கவிவாணராய்த் திகழ்ந்த படிக்காசுப்புலவர் சரிதத்தை ஆராய்ச்சிமுறையாக விரித்துரைக்கும் ஓர் அரிய வசன நூலாகும். இதிற் புலவருடைய கல்வித்திறமை, அறிவின் திட்பம் தெய்வபக்தியின்சிறப்பு முதலிய அருங்குணங்களனைத்தும் அவர்சரித நிகழ்ச்சிகள்கொண்டு நன்குவிளக்கப்பட்டிருப்பதோடு, பழையவும் புதியவுமான பல தமிழ்நூல்களினின்று மேற்கோள்களை ஆங்காங்கு ஏற்றவாறு எடுத்தாண்டிருத்தல் இவ்வாராய்ச்சியை அருமையுடையதாகச் செய்கின்றது. இதன் ஆசிரியராகிய கோயம்புத்தூர்ப் பண்டிதர் திரு. சி. கு. நாராயணசாமிமுதலியாரவர்கள் இதுபோன்ற ஆராய்ச்சிப்புத்தகங்களைத் தொடர்ந்து எழுதி வெளியிடவேண்டுமென்ற விருப்பங்கொண்டு உழைத்துவருதல் பாராட்டற்பாலது. பள்ளியிற்பயிலும் மாணவர்களுக்கு இதனையும் பாடப்புத்தகமாகவேற்றுக்கொள்ளுமாறு கல்வியதிகாரிகள் வேண்டிக்கொள்ளப்படுகின்றனர். இப்புத்தகத்தின் விலை அணா 8. வேண்டுவோர், திரு. சி. கு. நாராயணசாமிமுதலியாரவர்கள் 126, தாமஸ்வீதி, கோயம்புத்தூர் என்ற விலாசத்திற் பெறலாம்.

---

[7] இவர்கள் முதற்பராந்தகன் மகளுடைய மக்களாவார். ஆகவே சுந்தர சோழன் தனது அத்தைமகளாரை மணந்தான். அத்தைமகனுக்குச் சேனாபதிப்பட்டமும் கொடுத்தான் 40 of 07.

உ

தொல்காப்பியச் சொல்லதிகாரக் குறிப்பு.

தமிழ் லெக்ஸிகன் ஆபீஸ் உதவிப்பதிப்பாசிரியர்

ப்ருஹ்மஸ்ரீ P. S. சுப்பிரமணியசாஸ்திரி (M.A., L.T.,) அவர்கள்

எழுதுவது.

[உஎஅ-ஆம்பக்கத் தொடர்ச்சி]

பொருண்மை சுட்டல் வியங்கொள வருதல்
66-வது வினைநிலை யுரைத்தல் வினாவிற் கேற்றல்
சூத்திரம். பண்புகொள வருதல் பெயர்கொள வருதலென்
றன்றி யனைத்தும் பெயர்ப்பய னிலையே.

இங்குப் பெயர்ப்பயனிலை என்பதற்கு உரையாசிரியர் பெயர்வேற்றுமைப்பொருள் என்று கூறுகின்றார். சேனாவரையர் பெயர்வேற்றுமைக்குப்பின்வரும் முடிக்குஞ்சொற்பொருள் என்கின்றார். நச்சினார்க்கினியர் 'தன்னை முடித்தற்குப் பின்வருஞ்சொல்லின்பொருண்மையைத் தான் அவாவிநிற்கும் நிலைவேறுபாட்டைப் பயனிலையென்றார், சேனாவரையர்கூறுவதே பொருத்தமானது.

சேனாவரையர் 'ஆ பல என்புழிப் பலவென்பதற்குப் பயனிலையாதெனின்' என்று ஆசங்கித்து அதற்கு, 'அது பயனிலையாய்......அதனை முடித்தமைந்து மாறு மென்பது' என்று விடையளித்து, பின் 'அஃதேல், பயனிலைகொள்ளாது எழுவாய்வேற்றுமையாமாறென்னையெனின்' என்று கூறுவதால், பல என்பது எழுவாய்வேற்றுமை என்றே கொண்டுள்ளார் என்று தோன்றுகிறது. 'எழுவாய்வேற்றுமை பெயர்தோன்று நிலையே' என்னுஞ்சூத்திரத்திற்கு உரையாசிரியர், நச்சினார்க்கினியர் கொண்ட பொருளின்படி பல என்பது எழுவாய்வேற்றுமையாகாது; அதற்குப் பயனிலையில்லாததால்,

நச்சினார்க்கினியத்தில் 'ஆ வென்னும் பொருள் கெட்டதேனும், அந்த ஆவினது சாதித்தன்மை எக்காலத்துங் கெடாதுநிற்கும்' என்றுளது. இங்கு அவ்வாவினது சாதித்தன்மை என்பதற்கு கோத்துவம் (கௌத்வம்) என்ற சாதி (ஜாதி) என்று பொருளேயொழியக் கோவின் சாதித்துவம் (ஜாதித்வம்) என்று பொருளில்லை. ஆனது பற்றியே இங்குத் தன்மை என்பதற்குக் குணம் என்று பொருளன்று.

67-வது சூத்திரம். பெயரி னாகிய தொகையுமா ருளவே
யவ்வு முரிய வப்பா லான.

இச்சூத்திரத்தின்பொருள்:—

உரையாசிரியர்:—அறுவகைத்தொகைச்சொல்லும் எழுவாய்வேற்றுமைப்பயனிலைப்பாடும் பிழையாதுவரும் என்றவாறு. இனி ஒரு கருத்து. 'பெயரினாகிய தொகையுமாருளவே' என்பது பெயரும் பெயருந் தொக்க தொகையும் என்றவாறு. உம்மையான் வினையும் பெயருந் தொக்க தொகையும் எழுவாய்வேற்றுமைப்பயனிலைப்பாடுபிழையாது வரும் என்று கொள்க.

சேனாவரையர்:—பெயரும்பெயருந் தொக்கதொகையு முள; அவையு முரிய எழுவாய்வேற்றுமையாய்ப் பயனிலைகோடற்கு என்றவாறு. பெயரினாகியதொகையு மென்னு மும்மையால், பெயரொடுபெயர்தொக்கனவேயன்றி, நிலங்கடந்தான், மாக்கொணர்ந்தான் எனப் பெயரொடு வினைவந்து தொக்க வினையினாகியதொகையு முளவென்பதாம். ஆகவே, பெயரொடு பெயரும் பெயரொடுதொழிலுந் தொக்கன தொகையென்பது பெற்றாம். அவ்வுமுரிய.........பெயரினாகியதொகையே கொள்ளப்படும்.

நச்சினார்க்கினியர்:—பெயரும் பெயருந் தொக்க தொகையும் உள. உம்மையாற் பெயரும் வினையுந் தொக்க தொகையும் உள; அவ்விரண்டனும் பெயரும் பெயருந் தொக்கதொகையும் உரிய அவ்வெழுவாய் வேற்றுமையாய்ப் பயனிலைகொள்ளுமிடத்து.

நச்சினார்க்கினியர் சேனாவரையர்மதமே கைப்பற்றியுள்ளார். உரையாசிரியரும் சேனாவரையரும், உம்மைக்கும் 'அவ்வுமுரியவப்பாலான' என்பதற்கும் பொருள்கூறுவதில் மாறுபடுகின்றனர்.

உரையாசிரியர் பெயர் எவ்வாறு பயனிலைகொள்ளுமோ அவ்வாறே தொகைச்சொல்லும் கொள்ளும் என்று உம்மைக்குப் பொருள் கொண்டனர். பின்னர் வினையும் பெயருந் தொக்க தொகையும் என்று உம்மைக்கு வேறொருவர்கருத்து என்றுங் கூறியுள்ளார். சேனாவரையர் உம்மையாற் பெயரொடு வினைவந்து தொக்க வினையினாகிய தொகையுமுள வென்பதாம் என்று கூறுகிறார். எழுவாய்வேற்றுமையைப்பற்றிக் கூறும் இவ்விடத்தில் உம்மையாற் பெயரும் வினையும் தொக்க தொகையும் உண்டு என்று கூறுவது பொருந்துமா? அன்றியும், பெயரினாகிய தொகையும் என்பதால் வருமொழி பெயராயிருக்கவேண்டுமென்பது இன்றியமையாததாயிருக்கும்போது வருமொழி வினையாயிருப்பதை இவ்வும்மை உணர்த்திற்றென்றல் எவ்வாறு பொருந்தும்? நிலங்கடந்தான் என்பதைத் தொகைச்சொல்லென்றுகருதி, அதற்குப் பிரமாணம் வேறெங்குங் காணப்படாததால், இவ்வும்மைக்குப் பிரகரணவிரோதமானபொருள் கொடுத்தனர்போலும். பெயரினாகியதொகை யென்பதாற் பெயரை வருமொழியாகக்கொண்ட அறுவகைத்தொகைச்சொல்லும் பெறப்படுமாகையால், உரையாசிரியர் தன்மதமாகக்கூறினபொருளே உம்மைக்குப் பொருத்தமாயுள்ளது. சேனாவரையத்தில், 'பெயரினாகிய தொகையு' மென்றவும்மையான் வினையினாகிய வினைத்தொகை தழுவப்பட்டதென்றும் உரையாசிரியர்கூறியதாகக் கூறி, "வினைத்தொகைக்கு நிலைமொழி வினையென்பது உரையாசிரியர்க்குக்கருத்தன்மை 'வினையின்றொகுதி காலத்தியலும்' என்னுஞ் சூத்திரத்திற் சொல்லுதும்" என்று கூறியுள்ளது. இருவருக்கும் கொல்யானை முதலிய தொகைச்சொற்கள் எழுவாய்வேற்றுமையாயிருந்து பயனிலைகொள்ளும் என்பதில் மாறுபாடில்லை. அச்சொற்கள் வினைத்தொகையென்பதிலும் மாறுபாடில்லை. கொல் என்பது பெயரெச்சம் தொக்குநிற்கும் வினையா? தாதுவா? என்பதில்மாத்திரம் வேறுபாடுளது. அதனை 'வினையின் றொகுதி காலத் தியலும்' (தொல். சொல். 415) என்னுமிடத்து ஆராய்வாம்.

இச்சூத்திரத்தில் உரையாசிரியர்மதப்படி பயனிலைகோடல்மாத்திரம் விதேயம். சேனாவரையர்மதப்படி எழுவாய்வேற்றுமையாய்நின்று பயனிலைகோடல் விதேயம். உரையாசிரியர்மதப்படி எழுவாய்வேற்றுமையாய்நிற்றல் 'எல்லாத்தொகையும் ஒருசொன்னடைய' என்பத

ணூற் பெறப்படும். சேனவரையர் "எல்லாத் தொகையு மொருசொன் னடைய" என்பதற்கு உரையாசிரியர்கூறிய பொருளை, "ஒருசொன் னடையவாமென்பதல்லது எழுவாய்வேற்றுமையா மென்னுங் கருத்தின் மையானும், அக்கருத்துண்டாயின் அவையும் எழுவாய்வேற்றுமையாய் நின்று 'அன்றியனைத்தும் பெயர்ப்பயனிலையே' என்றதனாற் பயனிலை யெய்துமாகலின் 'அவ்வுமுரிய வப்பாலான' வென்றல் கூறியது கூறிற்றுமாகலானும், அதுவு முரையாசிரியர்கருத்தன்றென்க" என்னுஞ் சொற்றொடரால் மறுத்துள்ளார். இம்மறுப்புப் பொருத்தமாயுளது என்று தோன்றுகிறது.

68-வது சூத்திரம். எவ்வயிற் பெயரும் வெளிப்படத் தோன்றி
பவ்விய னிலையல் செவ்வி தென்ப.

இச்சூத்திரத்தின் பொருள்:—

உரையாசிரியர்:—எல்லாப் பெயரும் பயனிலைப்படநிற்றற்றன்மை யில் திரியாமை அதற்குச் செவ்விது என்ப. பிறிது அதற்குச் செவ்வியதாகாமையு முடையது. (யாதோ எனின், உருபேற்றலும் பெயரதிலக்கணம். அவ்வுருபேற்றலையுடையதாகாது எனலுமாம். நீயிர் என்பது பெயர்; பெயராயினும், நீயிரை என்று உருபேலாது.)

சேனவரையர்:-மூன்றிடத்துப்பெயரும் செவிப்புலனாகத்தோன்றி நின்று பயனிலைகோடல் செவ்விதென்ப ஆசிரியர் எ-று (எனவே, அவ்வாறு தோன்றாதுநின்று பயனிலைகோடலு முண்டு, அது செவ்விதன் றென்றவாறும்).

நச்சினார்க்கினியர்:—மூன்றிடத்து எழுவாயுஞ் செவிப்புலனாகத் தோன்றிநின்று பயனிலைகோடல் செவ்விதென்ப ஆசிரியர் எ—று. (எனவே அவ்வாறு தோன்றாதுநின்று பயனிலைகோடலும் உண்டு, அது செவ்விதன்று என்றவாறும். செவ்விதெனவே பிறிதேற்றற்குச் செவ்வியவாகாமையும் உடைய; அவை நீயிரென்பதும் அவ்வாய்க் கொண்டான் என்பதும், உருபேற்றற்குச் செவ்வியவல்ல.)

சூத்திரத்தால் வெளிப்படையாகக் குறிக்கப்படும் பொருளில் மூவருக்கும் மாறுபாடில்லை. 'செவ்விதென்ப' என்றதனால், உட்பொருளாக

அறிவிக்கப்பட்ட சில செவ்விதன்று என்ற கருத்தில், சில என்பது எதனைக் குறிப்பதென்பதில் உரையாசிரியருக்கும், சேனாவரையருக்கும் மாறுபாடு. உரையாசிரியர் உருபேற்றல் பெயர்க்கிலக்கணமென்று கொண்டு பயனிலைகொள்ளும்பொழுது உருபேற்றல் செவ்விதன்று என்று கூறி அதற்கு உதாரணம் 'நீயிர்' என்று கொடுத்துள்ளார். சேனாவரையர் வெளிப்படத்தோன்றாமல்நிற்பது செவ்விதன்று என்றார். நச்சினார்க்கினியர் இருவர்கூறினதையுங் கூறிப்போந்தார். 'நீயிர்' என்பது பெயராயினும் தானே திரிபின்றி நின்று உருபை யேலாது தான் 'நும்' என்று மாறி உருபைக்கொள்ளுவதால் உரையாசிரியர் நீயிர் என்பதை இச்சூத்திரத்திற்கு உதாரணமாகக்கொண்டார். சேனாவரையர் நீயிருக்கு ஆதேசமாகிய நும்மென்பது உருபைக்கொண்டாலும் ஸ்தானி (ஸூாநீ) யாகிய நீயிரே உருபேற்றதாகக் கொள்ளவேண்டுமென்று வடமொழி நியாயத்தைக்கொண்டு உரையாசிரியரை மறுத்துள்ளார்.

'அவ்வாறுதோன்றாது பயனிலைகோடலுமுண்டு, அது செவ்விதன்று' என்று சேனாவரையர்கூறுவது பொருத்தமாயுளது. உரையாசிரியர் கூறியுள்ளதை மறுத்த சேனாவரையரை மறுக்காமல் அவ்விருவர்கருத்தையும் நச்சினார்க்கினியர் தழுவிக்கூறியுள்ளார்.

பாடபேதம்:-சேனாவரையத்தில் 'அவ்வாய் நீயிர் என்பன உருபேலாவென்று காட்டினரால் உரையாசிரியரெனின்', என்றதனால் 'அவ்வாய், நீயிர்' இரண்டினையும் உதாரணமாக உரையாசிரியர்கூறினர் என்று தோன்றுகிறது. இவ்விரண்டும் நச்சினார்க்கினியத்திலும் கூறப்பட்டுள்ளன. ஆனால், இப்போது பதிப்பித்திருக்கும் இளம்பூரணத்தில் இச்சூத்திரத்தின்கீழ் 'அவ்வாய்' என்பது காணப்படவில்லை.

69-வது	கூறிய முறையி னுருபுநிலை திரியா
சூத்திரம்.	தீறுபெயர்க் காகு மியற்கைய வென்ப.

இச்சூத்திரத்தின்பொருள் மூவருக்கும் ஒன்றே. நிலைதிரியாது என்றுகூறுவதன் பயன் உரையாசிரியர்மதத்தில் வேறு; சேனாவரையர், நச்சினார்க்கினியர்மதத்தில் வேறு. "'நிலைதிரியாது' என்றது இவை இடைச்சொல்லாகலால் 'தம்மீறுதிரிதல்' (தொல். சொல். 251) என்னு

மிலக்கணமுடையசொல்லோ எனின், அவை இல என்றதற்குக் கூறினான் என்பது. அன்றியும், முன்னர் வேற்றுமைமயங்கியலுள் 'கு ஐ ஆன் என வரூஉம் இறுதி அவ்வொடு சிவணும்' (தொல். சொல். 108) என்று செய்யுட்கண் திரிபுகூறுப வாகலானும் அது சொல்லினார் என்பது" என்று உரையாசிரியர் கூறுகின்றார். சேனாவரையர் 'வினைச்சொலிறுதி நிற்கு மிடைச்சொல் தாமென வேறு உணரப்படாது அச்சொற்குறுப் பாய்நிற்குமன்றே, இவை யவ்வாறு பெயர்க் குறுப்பாகாது தாமென வேறுணரப்பட்டு இறுதிநிற்குமென்பார் 'நிலைதிரியாது என்றார்' என்று கூறினர். நச்சினார்க்கினியர் சேனாவரையர்மதத்தையே கைப்பற்றியுள் ளார். உருபும் இடைச்சொல்; வினைச்சொல்லிற்கு இறுதிநிற்கும் 'அன், ஆன்' முதலியனவும் இடைச்சொல்; உருபுக்கும் பொருள் உள்ளது; அன், ஆன் முதலியனவற்றிற்கும் பொருள் உள்ளது. அவ்வாறிருக்க, அன், ஆன் முதலியனமாத்திரம் வினைக்குறுப்பாய்நிற்கும், உருபு பெயர்க் குறுப்பாய்நில்லாது என்று கொள்வதிற் பயன் யாது? என்பது புலப்பட வில்லை. ஆதலால், சேனாவரையர்சொன்ன பயனைவிட உரையாசிரியர் கூறியுள்ளது பொருத்தமானது என்று தோன்றுகிறது. உருபுதிரிந் தால் 'வினையே .... தொழின்முதனிலையே' (தொல். சொல். 112) என் னுஞ் சூத்திரத்திற் கூறப்பட்ட எண்வகைத் தொழின்முதனிலையில் அந்த உருபு எதனைக்குறிப்பது என்று தெளிவாய் அறியமுடியாதாகை யால், பெயர் (ப்ராதிபதிகம்) ஒருவாறு திரிந்தாலும் உருபு திரியாது என்று அறிவித்தற்கு 'நிலைதிரியாது' என்று சொல் உபயோகித்தார் ஆசிரியர் என்றுங் கூறலாம்.

உருபைப் பெயர்க்கு முதலிடை யிறுதி இவற்றுள் எவ்விடத்துச் சேர்ப்பது என்ற ஆசங்கை தோன்ற, ஈற்றிலேதான்சேர்க்கவேண்டுமென் பதை உணர்த்தற்கு 'ஈறு' என்ற சொல்லைச் சூத்திரத்தில் உபயோகித் தார். உலகத்திற் சிலபாஷைகளில் உருபை முதலிலும், சிலபாஷைகளில் இடையிலும் சேர்ப்பது காண்க.

[தொடரும்.]

ஸ்ரீ:

குருபரம்பரை.

எம்பெருமானார்வைபவம்.

[௨௬௮-ம் பக்கத்தொடர்ச்சி.]

இப்படியேமடைமாறுப்பத்தியினாலிளையாழ்வார்
செப்பரியசிந்தையினாற்சொல்லினாற்செய்கையினால்
முப்பொழுதுமனுபவித்துமூவிரண்டுதிங்களவண்
ஒப்பரியபெரியநம்பியுடன்வாழ்ந்தாரந்நாளில். (௧௫௯)

பெரியநம்பியன்பின்மிகும்பேரருளாலங்கவர்க்குத்
தெரிசனத்தினெறியனைத்துஞ்சீர்பெறவாங்கெடுத்தோதிக்
கரியநிறச்செய்யவாய்க்கமலநயனத்தழகார்
அரியையிளையாழ்வார்தம்மகத்திலுறப்பதிவித்தே. (௧௬௦)

வைகினாறுதிங்கண்மலர்மகள்கோன்றெரிசனத்தின்
செய்யநெறிமுறைகேட்டுச்சீபெரும்பூதூருறையும்
ஐயனுளமுகந்தருளியாருயிரும்யாக்கையும்போல்
உய்யுநெறியவைகாட்டுமறையவனோடுறவாழ்ந்தான். (௧௬௧)

பேதமறுமிளையாழ்வார்பெரியநம்பியென்றுரைக்கும்
மாதவஞ்சேர்நிலையினருமறுவறுசீர்நயிச்சியத்தா
லோதுமுடலிரண்டாகியுயிரொன்றாய்வாழுநாட்
போதமிகும்பெரியநம்பிமனையாட்டிபூதூரில். (௧௬௨)

வந்துதித்தவிளையாழ்வார்மனையாட்டியென்றுரைக்குஞ்
சந்தமிகும்பூங்குழலாரிருவர்களுங்களிகூர்ந்த
சிந்தையராயொக்கலைமேற்றிகழ்செய்பொற்குடமேந்தி
யிந்தநிலத்தொருகிணற்றிலிரும்புனலுக்கேகினார். (௧௬௩)

சென்றுசெழும்புனல்பெருகிச்செறிகிணற்றின்றிண்கரைமேல்
நின்றிறைவைத்தோண்டியினில்நெடுந்தாம்பையுறப்பூட்டி
யன்றுவிடுத்தரும்புனலையலைத்தெற்றியுறமுகப்ப
ஒன்றுகலந்தொன்றோடேயுறக்கலந்துபிரிவுறலும், (௧௬௪)

வேறு.

ஆண்டகையிளையாழ்வார்தந்தேவியாரதுகண்டந்தத்
தோண்டியையுடைத்துப்போட்டுச்சுரந்தெழுவெகுளியோடு
மீண்டுதம்மகத்துட்புக்குவேறொருதோண்டிகொண்டு
பூண்டதங்குலத்தைப்போற்றிப்புனன்முகந்தகத்துட்புக்கார். (௧௬௫)

வேறு.

பெரியநம்பிதேவியாரொருமொழியும்பேசாதே
விரிபுனலாற்குடநிறைத்துமெய்ந்நிறைத்ததன்பினொடுந்
தெரிவுறச்சென்றவையெல்லாஞ்செப்பினாள்கணவனுக்கங்
கரியபொருளுணர்ந்தவனுமத்திறங்கேட்டிருந்தெண்ணி. (௧௬௬)

வேறு.

இப்படிசெய்தார்காணுமென்றிதையிளையாழ்வான்பாற்
செப்பிடிலவனுமந்தச்சேயிழைதன்னைக்கோபித்
தப்பொழுதகற்றுஞ்சொல்லாதடக்கிலோவஞ்சமாகும்
தப்பறவிரண்டுநாமேசாற்றல்சாற்றாமைவேண்டா. (௧௬௭)

என்றிருந்தகத்துளெண்ணியேந்திழையாடன்னோடும்
அன்றெழுந்திளையாழ்வாருமறியுமுன்விரைவினேகிச்
சென்றுசீரரங்கமன்னித்தேசிகர்சிங்கம்வாழ்ந்தான்
ஒன்றுமிதுணராப்பூதூர்வள்ளலுமுவப்பினோடும். (௧௬௮)

தேசிகனெங்கேயென்னச்சென்றனரொன்றும்போலே
ஆசிலானரங்கம்புக்கானென்றனரருகினின்றார்
பேசிடாதேகற்கேதுவென்கொலப்பெரியோனென்றார்
வாசவார்குழலாணின்சீர்மனைவியாற்றுன்புற்றென்றார். (௧௬௯)

ஏங்கியப்பொழுதேநெஞ்சமீடழிந்திளையாழ்வாரும்
ஆங்கஃதெதனாலென்றாராயிழைசெய்ததன்மை
பாங்குநின்றவர்கள்கூறப்பதைத்தெழுசிந்தையோடும்
பூங்குழலமர்ந்துவைகும்பொற்றிருமனையிற்புக்கார். (௧௭௦)

வானவரிடுக்கண்டீர்த்தான்மனைபுகவெதிரேசென்ற
தேனமர்குழலைநோக்கித்திருக்கச்சிநம்பிமுன்னம்
போனகஞ்செய்தசேடந்தருவரோற்புனிதமென்றே
நானவன்பின்சென்றேத்தாவையுறுமபசாரந்தான், (௧௭௧)

அன்றுநீயொன்றுபண்ணவப்பிழைபொறுத்தேனந்தோ
இன்றுமென்னுவினாதனெனவருபெரியநம்பி
தன்றிருவுளத்திற்கன்றத்தாணியோர்காணவென்னைக்
கொன்றதிற்கொடியபாவம்பண்ணினாய்கூற்றமன்னாய். (௧௭௨)

என்றுரைத்துன்னோடென்னோடிசைந்தனதொந்தமெல்லா
நின்றதிங்கின்றோடென்னநீணிலமிரங்கவந்த
மன்றல்சேர்குழலாள்வைகுமனையைவிட்டகன்றுவேறோர்
நன்றிசேர்தலத்தின்மன்னிநான்மறைவியந்துகூறும். (௧௭௩)

உத்தமவேடமாகியோங்குசீர்ச்சன்னியாசம்
இத்தலந்தன்னிலின்றேகைக்கொள்வேனென்னவெண்ணி
முத்தருமறைகளோர்ந்தமுனிவரும்புகழ்ந்துபோற்றும்
நித்தரிலொருவனாகிநீணிலத்துதித்தானன்றே. (௧௭௪)

வேறு.

இருந்தானொருப்பட்டிளையாழ்வானிசைக்குமாசூரியப்பிள்ளை
தருந்தாமஞ்சேர்குழலணங்கித்தலைவனார்க்குமுன்பிறந்த
வருந்தானஞ்சீர்த்தவம்பொறைசேராண்டாள்வயிற்றிலவதரித்து
மருந்தாம்பிறவிப்பிணிக்கென்னவந்தநந்தாவிளக்கனையான். (௧௭௫)

பேசவினியகந்தாடைமுதலியாண்டான்புறப்பட்டுத்
தேசமறியவிளையாழ்வார்திரிதண்டேந்தவொருப்பட்ட
மாசிலாதசீருரையைக்கேட்டுமனத்திற்களிகூர்ந்து
நேசத்தாலேவந்திருந்தநினைவின்மிக்கான்கழல்பணிந்தான். (௧௭௬)

பணிந்தமுதலியாண்டானைப்பார்த்துப்பரமசாத்துவிகன்
துணிந்தோமதலாய்நான்மறைமுன்சொன்னசன்னியாசத்தில்
அணிந்தமென்பூங்குழலியைவிட்டகன்றோமெதுநின்கருத்தென்றுன்
திணிந்தவினையின்றொடர்வற்றமுதலியாண்டான்செப்புவான். (௧௭௭)

வேறு.

தொண்டனேன்றேவரீர்க்குச்சொல்வதொன்றுளதோவானிற்
றிண்டிறலிரவிதன்னைச்செறிமுகிற்கணங்கண்மூடிக்
கொண்டுவிட்டகன்றதன்மைபோன்றதின்கோலங்கண்டு
பண்டுநானறிவேனின்றும்பார்த்துளபொழுதின்மேலோய். (௧௭௮)

முற்றவும்விடுமினென்னமூதறிவுடையமாறன்
சொற்றதுநினக்கேயன்றேசுருதிகளனைத்துநின்னிற்
கற்றவர்யாவர்கற்றுங்கண்ணனைக்கருத்திலோர்ந்து
பற்றிலரென்னிற்கற்றகல்வியாற்பயனென்றுண்டோ. (௧௭௯)

சீருறுமாறன்முன்னஞ்செப்பியதமிழ்வேதத்துக்
காரதிகாரிநீயேயன்றியுமொருவருண்டோ
பார்மிசைமுன்னந்தோன்றும்பத்தரிற்பின்னுமண்ணில்
நேர்பெறத்தோன்றுவாரில்நின்னையேயனையாயன்றி. (௧௮0)

குலத்தினைக்கல்விதன்னைக்கோதறுமிளமைச்செல்வ
நலத்தினைத்தனத்தைநம்பிநானிலத்தெவர்களுய்ந்தார்
சொலப்புகிலறிவின்மிக்கோய்துணிந்தமைநன்றுபொன்றாப்
பலத்தையும்வெறுத்துநின்றபரமசாத்திகனேயென்றான். (௧௮௧)

என்றிவையிளையாழ்வார்முன்னிறைஞ்சிநின்றியம்பக்கேட்டு
நன்றுநின்கல்விநன்றுநலனுறுமுணர்ச்சியென்னச்
சென்றெடுத்துணர்வுந்தூயசிந்தையுமழுந்தப்புல்லி
யின்றெனதாவியொத்தாயிருத்தியென்றிருத்திக்கொண்டான். (௧௮௨)

அப்படிநிகழுநாளிலாசிலாக்கூரமென்னுஞ்
செப்பருநகரில்வைகுஞ்சிறந்தசீர்க்கூரத்தாழ்வா
ரொப்பிலாமைந்தனாயவோங்குநற்கூரத்தாழ்வான்
தப்பறவிளையாழ்வாருந்தவத்தின்மேலொருப்பாடுற்ற. (௧௮௩)

திறத்தினைக்கேட்டின்புற்றுச்சென்றவர்சரணந்தாழ்ந்திங்
கறப்பொருளாகிநின்றவாசறுமிளையாழ்வார்பா
லுறப்புகுமுதலியாண்டானுடனமர்ந்தாசரித்தான்
பிறப்பெனுங்கடலைநீந்திப்பேரருட்கரையைச்சேர்ந்தான். (௧௮௪)

வேறு.

அந்தவாறிருவர்களுமாசரிப்பவதன்பின்பென்
றந்தையாமிளையாழ்வார்கச்சிநம்பியெனுந்தவஞ்சேர்
சிந்தையார்மெய்ஞ்ஞானச்செழுந்தவனைக்கண்டிறைஞ்சி
எந்தையானினைந்ததிறைக்கியம்புகவென்றிசைத்தனனால். (௧௮௫)

வேறு.

தனைவிடுத்தருளாளர்க்குத்தன்னுடைமனத்துட்டோன்று
நினைவினையுரைப்பித்தந்நேமியானருளினாலே

வினையெலாமறமுனோற்றான்விண்ணவர்மகிழ்ந்துவாழ்த்தத்
தினையினதளவுமொன்றுந்திருவுளத்தாசையின்றி. (கஅசு)

வேறு.

அநந்தசரயுக்கரைமன்னியதனுட்புகுந்துசீராடிச்
சினந்திண்மயக்கங்கொடுங்காமந்தீராவஞ்சமிவைபுணர்ந்த
மனந்தனோடேயறவிட்டுவாக்குமுளமுஞ்செய்தொழிலுந்
தினந்தண்டுழாயான்றனக்காகும்வண்ணம்நின்றுசிந்தித்தே. (கஅஎ)

வேறு.

கருதருமுதலியாண்டான்கல்யாணகுணங்கடன்னைத்
திருவுளத்தெண்ணியந்தத்தேசினான்றன்னையன்றி
மருவியபற்றைவிட்டேன்வாதனையோடுமென்னக்
கருமுகில்வண்ணன்வைகுங்கனகமாமேருவொத்த. (கஅஅ)

புண்ணியகோடியாழ்வார்பொருவறுகுரவனாக
எண்ணிமற்றவரைநோக்கியாவருங்கேட்பமுக்கால்
நண்ணிநின்றருளிச்செய்துநான்மறைமகிழ்ந்துவாழ்த்தத்
திண்ணியகாவிதோய்த்ததிருப்பரிவட்டமுக்கோல். (கஅகூ)

சாத்தினனரையிற்கையிற்றரித்தனனரியைநோக்கி
யேத்தினன்றிருப்பல்லாண்டையாவரும்பன்னிநின்றார்
தோத்திரங்கூறத்தாழ்வான்றுகளிலாவொளிகொள்ஞான
நேத்திரமுடையாய்வாழிநீணிலத்தூழியென்ன. (ககூ0)

மங்களாசாசனத்தைவாக்கினால்மகிழ்ந்துபண்ணி
அங்கமர்முதலியாண்டானாசறுமுகத்தைநோக்கிப்
பொங்குசீர்ச்சுலோகமொன்றையுரைத்தனன்பொருளேதென்னிற்
றங்குமேழுலகில்ஞானத்தலைவராய்வைகுவோரில். (ககூக)

வேறு.

உன்னிலுன்னையொத்தவர்களுண்டோவந்தோவிளையாழ்வார்
சன்னியாதங்கொளுமிடத்துத்தனையும்விட்டுன்றனையொழிய
மன்னும்பொருள்களனைத்தினையும்விட்டேன்விட்டேன்மதிமிக்காய்
என்னுமுரையிங்குனக்கல்லாலொருவர்க்குளதோவெனச்சொன்னான். ()

வேறு.

அப்படிமுதலியாண்டானாசறுகுணத்தைச்சொல்லிச்
செப்பருங்கூரத்தாழ்வான்றிருவுளமகிழவந்த

வொப்பிலாவிருவரோடுமோங்குசீரிளையாழ்வாருந்
தப்பறவவ்வூர்மாயன்சரண்பணிந்தமருநாளில். (௧௯௩)

இலங்குசீரிருவர்கட்குமிசைத்தநற்றெரிசனுர்த்தந்
துலங்கிடவருளிச்செய்துதொந்தங்கள்பலவும்நல்கும்
புலங்கெடுத்தருளாளன்றன்பூங்கழல்நீழல்வைகி
மலங்களைந்தமலமாகிமன்னினாரந்நாடன்னில். (௧௯௪)

இருநிலத்தறிஞர்போற்றும்யாதவப்பிரகாசன்றான்
ஒருபகலவனைப்பெற்றவன்னைபாலுணவுதுய்த்து
வருமிடத்தவனைநோக்கிமற்றவளுரைக்குமைந்த
அருமறைநான்குங்கற்றாயனைத்துளகலையுங்கற்றாய். (௧௯௫)

உன்னுடன்சிலநாட்கற்றவோங்குசீரிளையாழ்வானும்
மன்னுலகளந்தமாமால்மலரடிகளைகணுகச்
சன்னியாசத்தைப்பற்றித்தலைவரிற்றலைவனானன்
புன்னுனிப்பனிநீர்வாழ்வைப்புதல்வநீபொருளென்றெண்ணி. (௧௯௬)

நிற்றலாவுலகந்தன்னினெடும்பகலிருந்துநீமுன்
கற்றநூலனைத்துநோக்கிற்கழுதைகுங்குமங்கொண்டேகு
முற்றதன்கந்தங்கொள்வானுணர்விலையதுபோலென்னப்
பெற்றதாய்பகரக்கேட்டுப்பேதைமைதவிர்ந்தேனென்ன. (௧௯௭)

வேறு.

அடியேன்செய்யத்தக்கவையேதருள்வாயென்னவவளடியை
முடியால்வணங்கிமுன்னிற்பான்முகத்தைநோக்கியுரைக்கின்றாள்
நெடியானுலகமுன்னளந்தநெடுமாலடியாரடிபேணுங்
குடியாய்ப்பூதூரிளையாழ்வான்போலநீயுங்கோதில்லாய். (௧௯௮)

முக்கோல்காவித்துவராடைமுறையாற்றரித்துமூவுலகுந்
தக்கோனென்னும்படிநடந்துதன்னுள்விளையுங்காமாதி
எக்கோதினையுமறிவனலாலெரித்துமரித்தமனத்தாலே
தொக்கோடிறையுமுறவின்றிநிற்றியென்றாடொழுதவனும். (௧௯௯)

வேறு.

ஆங்குநின்றகன்றுசென்றகம்புகுந்தனைத்தையும்
பாங்கறத்துறந்துசன்னியாசமின்றுபற்றநாம்
வாங்குநீர்வளைந்தவேலைவட்டமாகிமெய்ம்மையா
லோங்குபூவலஞ்செய்தெய்தவேண்டுமென்னவுன்னினான். (௨00)

உன்னிநாளையேகவென்னவோரிடத்தமர்ந்தன
னன்னிவேதியன்கனாவிலன்றிராநம்மாயனார்
மன்னிமாசில்பூதூர்வந்தவள்ளலைவலஞ்செய்தச்
சன்னியாசமெய்திரீயும்வாழியென்றுசாற்றினார். (௨௦௧)

அன்றுசென்றுமாயனாரளித்தசொப்பனத்தையோர்ந்
தின்றிதென்கொலோர்கனாவிருந்ததென்னவேதியன்
சென்றுகச்சிநம்பியோடுசெப்புமொப்பில்செங்கணாற்
கொன்றுநாணினைத்துளேனதின்னதென்னவொள்ளியோய். (௨௦௨)

கேட்டுவந்துரைத்தியென்றுகேடிலாதநம்பிதன்
றாட்டலம்பணிந்துசெப்பநம்பியுஞ்சமைந்துபோய்
வாட்டமற்றதாமரைக்கண்மாயனார்மலர்ப்பதத்
தீட்டுகின்றகாதலோடிறைஞ்சியாலவட்டமும். (௨௦௩)

எடுத்திரண்டுகைகளாலுமின்றெனாவிநாதவென்
றடுத்துநின்றுவீசிநின்றவச்சுதனிடத்துளம்
மடுத்துநீங்குபோதில்நம்பிமாயனோடுதன்னைமுன்
விடுத்தவன்பகர்ந்ததன்மையொன்றுகூறன்மேயினான். (௨௦௪)

வேறு.

ஈறிலாமாயம்வல்லாய்யாதவப்பிரகாசன்றான்
மாறிலாமனத்திலொன்றுநினைத்துளேன்மாயனார்பாற்
கூறியநினைவைக்கேட்டுக்கொண்டெனக்குரைத்தியென்றான்
றேறமற்றவன்றான்கேட்டநினைவினைச்செப்பாயென்றான். (௨௦௫)

என்றிவைநம்பிகூறயாதவப்பிரகாசன்றன்
நன்றிசேர்நினைவைக்கேட்டிநவையிலாவவனையீன்றாள்
இன்றுநீயிளையாழ்வானென்றிசைத்திடுமேலோன்போலப்
பொன்றவில்சன்னியாசங்கொள்ளெனப்புகன்றானென்னல். (௨௦௬)

ஆங்கதற்கிசைந்துபூமிவலஞ்செய்தவ்வேடங்கொள்வான்
பாங்குறவெண்ணிஞாப்பத்தனார்கனாவில்நான்போய்
ஓங்குநம்மிளையாழ்வானையொருமுறைவலம்வந்தால்நான்
தாங்குமேழுலகுமூக்கால்வலம்வரும்பலத்தைத்தக்கோய். (௨௦௭)

தருமெனவுரைத்தேனத்தைநம்புதலின்றித்தான்வந்
தொருநினைவுண்டுகேளென்றுன்னோடுமுரைத்துவிட்டான்
பொருவிலாநிலையாயெல்லாப்புவனமுமென்னுள்வைகும்
மருவுநான்காரிமாறன்மனக்கமலத்திலென்றும். (௨௦௮)

தங்குவெனவனைத்தன்சீர்மனத்திடைத்தங்கவைத்தான்
பங்கமிலிளையாழ்வானப்பத்தனையொத்தாரிங்கே
எங்குளரந்தோவந்தோவெலையறுகுணத்தாயித்தை
அஙகவன்றனக்குச்செப்பென்றச்சுதனருளிச்செய்தான். (௨௦௧)

இப்படிமாயன்கூறயாதவப்பிரகாசன்பாற்
செப்பினானிதனைச்சென்றதிருக்கச்சிநம்பிகேட்டன்
றப்பொழுதெழுந்துதூயவந்தணன்பூதூர்மன்னும்
ஒப்பிலாமணியைநோக்கியுருகிநின்றினையசொல்வான். (௨௧௦)

வேறு.

தக்கமாறன்றிருவுளத்திற்றாமோதானுந்தனிமுதல்வன்
ஒக்கவுலகமனைத்தினையும்விழுங்கிப்புகுந்தானெனவுரைத்தான்,
புக்ககாலத்தவனாகியின்றுபூதூர்நகர்ப்பிறந்து
தொக்கவின்னற்றொடர்கெடுப்பான்றோன்றுங்கருணைச்சுகோததியே. ()

திருமகள்பூமியோடேசெங்கண்மாலுன்றனுள்ளே
மருவுவானென்றானீயோர்மானிடவேடமாகி
இருநிலத்துற்றாயந்தோயாவரேயறிவார்நின்னைப்
பொருவரும்புகழாய்நான்முன்னுரைத்தவைபொறுக்கவேண்டும், (௨௧௨)

வேறு.

புவியுமேலாமிருவிசும்பும்புகலுந்திசைகளோரெட்டுங்
குவியநின்றநின்னகத்துட்கொண்டுகுரவனருளாலென்
செவியின்வழியாய்வந்தடியேன்சிந்தைபுகுந்தாயெனும்பரம
கவிகளுரைத்தபடிநின்னிற்கண்டேன்கண்டேனெனக்கழறி. (௨௧௩)

சென்றுவணங்கிவலஞ்செய்துசீமானிளையாழ்வாரருளால்
அன்றுசன்னியாசம்பெற்றாய்ந்தானந்தவருமறையோன்
நன்றிசேருமிளையாழ்வார்ஞானமிக்கதொண்டரொடும்
ஒன்றிக்கச்சியருளாளரோங்குகழற்கீழுறவாழ்ந்தார். (௨௧௪)

வேறு.

அந்தவாறனைத்தையுமறிந்தரங்கர்தாளின்மேற்
சிந்தைவைத்துமன்னுகின்றதேசிகக்குழாங்களும்
இந்தமாநிலத்தினிற்பிறந்திறக்குமின்னல்சேர்
பந்தமுற்றுமின்றொழிந்தவிர்ந்ததென்றுபாரின்மேல். (௨௧௫)

ஆடினார்க்ள்தென்னரங்கர்தாளை...ன்றுசென்னியிற்
சூடினார்கள்வேதமாதிசொற்றெரிந்துபண்முறை
பாடினார்களங்குமிங்குமத்திறம்பகர்ந்தெழுந்
தோடினார்களன்பரின்பமுற்றதென்னுரைப்பதே. (௨௧௬)

வேறு.

அப்படியேதிருவரங்கத்தினிதமர்ந்தெம்மாளவந்தா
ரொப்பரியதிருவடிக்கீழுற்றுறையுமுதலிகளுஞ்
செப்பரியவரங்கனார்திருமுன்பிற்புகுந்திறைஞ்சி
முப்பொழுதுமமரர்தொழுமுழுமுதலேயிளையாழ்வான். (௨௧௭)

வேறு.

சன்னியாதங்கைக்கொண்டுதயங்குகச்சிமாநகரில்
மன்னிவாழாநின்றனனம்மானபாவன்னாதமுனி
யுன்னிவகுத்ததெரிசனத்துக்கோங்குமதிபனெனவுரைத்தார்
முன்னமாளவந்தாரெம்மூவர்முதலேநீயவனே. (௨௧௮)

விரைவிலழைத்தித்தலத்தாக்கிவேண்டுமுறுதியாளவந்தார்
தரையிலவற்கென்றெங்களிடைவைத்துப்பரமபதஞ்சார்ந்தார்
உரையும்பொருளுமெங்களைக்கொண்டவனுக்கிறைவனேதவித்துப்
புரையொன்றின்றியெம்மொடவன்பொருந்தும்வண்ணமருள்கவென. ()

வேறு.

பாரரப்பணிந்தேத்திப்பாகவதர்கட்டுரைப்பக்
காராருமுகில்வண்ணன்காஞ்சிமாநகரமருஞ்
சீராருமிளையாழ்வார்சீக்கிரத்தில்வருகவென
வேராருந்திருமுகமுமீந்திருவர்புகவிடுத்தார். (௨௨௦)

சென்றவர்களிளையாழ்வார்திருவடியிலுறவிறைஞ்சி
நின்றரங்கர்திருமுகத்தைநீட்டினாரவரெழுந்தங்
கன்றமரப்பணிந்தேற்றாரருளியசொற்பயனுணர்ந்து
நன்றென்வேதிருக்கச்சிநம்பியொடுநம்பெருமாள். (௨௨௧)

வருகவெனத்திருமுகமும்வரவிடுத்தாரருளாளர்
திருவுளத்தக்கறிவித்தத்திறத்தினையிங்குரைத்தியென
மருவருஞ்சீரிளையாழ்வார்வணங்கியிவைகட்டுரைப்பப்
பொருவறுஞ்சீர்க்கச்சிநம்பிபுனிதனுடனவைபகர்ந்தான். (௨௨௨)

அங்கதுகேட்டருளாளரவனியின்கணெதுவரினுந்
தங்கள்தங்கள்பெண்டுகளைப்புறம்போக்கறக்கதுவோ
பொங்குகடலுலகத்தார்புகல்வரிதுபோமென்னச்
சங்கமருந்திருக்காத்தான்சாற்றினானதைநம்பி. (௨௨௩)

ஆசிலாவிளையாழ்வார்க்கறைந்தனர்போயதையரங்கத்
தீசனார்திருமுகங்கொண்டேகினாருடனுரைத்து
நீசனேனென்செய்கேனெடுமொலுக்கித்திறத்தைப்
பேசுமெனவிடுத்தனர்நம்பெருமாளுமதுகேட்டு. (௨௨௪)

வேறு.

சீராராழ்வார்திருவரங்கப்பெருமாளரையர்தமைக்கூவி
யோரார்கச்சியருளாளரிளையாழ்வானையாங்கேட்டாற்
றூரார்நீயிர்போயவரைச்சந்தோடிக்கும்படிபாடிப்
பூராயத்தாற்கொணர்மினெனப்பூவைவண்ணரெனத்...... (௨௨௫)

செம்பொற்றிரட்டிண்மதிளரங்கரிவணஞ்செப்பச்சென்றிறைஞ்சி
யம்பொற்சிவிகைமேல்கொண்டங்கரையர்காஞ்சிநகரெய்தி
யும்பர்க்கமுதமளித்தபிரானோங்குக்கமலப்பூங்கழற்கீழ்
வம்புற்றலர்ந்தமலர்தூவிவணங்கிச்சிலநாள்மன்னினார். (௨௨௬)

[தொடரும்].

உதவிப்பத்திராதிபர்.